விலை சதம் 20




# சுதந்திரன்
# SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, கார்த்திகை 23 உ திங்கள் (8-12-69) றம்ஸான் 20 புத்தகம் 27 இதழ் 4

கிளிநொச்சி தொகுதியில்

## ஆலாலுவுக்கு வரவேற்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளராகக் கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடவிருக்கும் வழக்கறிஞர் திரு: மு. ஆலால சுந்தரம் அவர்கள் துணுக்காய் பகுதியிலுள்ள யோகபுரம், மல்லாவி, அனிஞ்சியன் குளம் கல்விளான் ஆலங்குளம், உயிலங்குளம் ஆகிய பகுதிகளுக்கு சென்றபோது அங்கு வசிக்கும் மக்கள் மனமகிழ்வுடன் வருக என வரவேற்றார்கள்.

சென்ற வாரம் இரு தினங்கள் இப்பகுதியில் கட்சியின் கிளைகளை அமைப்பதில் ஈடுபட்டிருந்த வேட்பாளரை மக்கள் ஒன்று கூடி வரவேற்று, உற்சாகத்துடன் புதிய கிளைகளை அமைத்து, தேர்தல் வேலைகளில் சுறுசுறுப்புடன் செயலாற்றியது எதிர்க்கட்சியினருக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டது.

## கருணாநிதி மீது 'டெயிலி நியூஸ்' வசைமாரி!

நான்கு கோடித் தமிழர்களின் தலைவரும் தமிழ் நாடு முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதி மீது மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்தி வசைமாரி பொழிந்திருக்கிறது சிங்கள முதலாளிகளால் நடத்தப்படும் ஏரிக்கரை நிறுவனத்திலிருந்து வெளிவரும் ஆங்கில நாளேடான 'டெயிலி நியூஸ்'. தமிழ் நாடு முதலமைச்சர் மீது சீறி விழுந்து அவரை தரங்குறைந்த வார்த்தைகளால் மட்டரகமாக திட்டியுள்ளதன் மூலம் தனது தென்னிந்திய - தமிழர் விரோத மனப்பான்மைக்கு முத்திரை குத்திக்கொண்டிருக்கிறது இந்த ஏடு.

கருணாநிதி இங்கு வருவதால் பதட்டநிலை ஏற்படுமென்றும் அதன் பிரதிபலிப்பாக மலையகத் தமிழர்கள் மீதும் ஏனைய இந்திய வம்சாவளித் தமிழர்கள் மீதும் பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்படலாமென்றும் எச்சரித்துள்ளது ஏரிக்கரை ஏடு.

தமிழ் நாட்டு முதல்வர் மீது விஷம் கக்கியுள்ளதன் மூலம் நான்கு கோடி தமிழ் நாட்டு மக்களின் வெறுப்பை மட்டுமன்றி திரு. கருணாநிதி மீது பேரன்பு கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்களது கசப்பையும் 'டெயிலிநியூஸ்' சம்பாதித்துள்ளது!

30-11-69 'டெயிலிநியூஸ்' எழுதியிருந்த இவ்வாசிரியர்த் தலையங்கத்தை வாசித்த தமிழ் அன்பர்கள் பலர் தாம் இனிமேல் அவ்வேட்டை கையாலும் தொடுவதில்லையென சபதமெடுத்திருப்பதாக சுதந்திரனுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளனர். (விபரம் 4-ம் பக்கம்)

## 'சன்' ஏட்டின் கயிறு திரிப்பு!

"கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த தமிழரசு பா. உ. ஒருவர் யூ. என். பி. யில் சேர விண்ணப்பித்திருப்பதாக இம்மாதம் 3ம் திகதி 'சன்' ஆங்கில ஏடு வெளியிட்டிருந்த முன் பக்கச் செய்தி படு விஷமத்தனமானது; முற்றிலும் ஆதாரமற்றது; முழுக்க முழுக்க பொய்யிலே உருவாக்கப்பட்டது."

—இவ்வாறு கிழக்கு மாகாணத் தமிழரசு பா. உறுப்பினர்கள் சுதந்திரன் நிருபரிடம் அழுத்தந்திருத்தமாகதெரிவித்துள்ளனர். 'தமிழரசுக்கட்சிக்கு எதிராக பொய் எழுதி வரும் தினபதியின் சகோதர ஏடே 'சன்' என்பது குறிப்பிடத்தக்கது!

பல்கலைக் கழகப் பிரச்சினை:

# ரோயல் கமிஷன் இல்லை! அரசு திடீர் முடிவு!

## அடுத்த வாரம் பிரதமரை தமிழரசுத் தூதுக்குழு சந்திக்கும்!

தமிழ்ப் பகுதிகளில் பல்கலைக் கழகம் நிறுவுவது சம்பந்தமாக ஆராய்வதற்கு ரோயல் கமிஷன் அமைக்கும் திட்டத்தை கல்வியமைச்சு இப்போது முற்றுக் கைவிட்டு விட்டதாக அறியப்படுகிறது. தேசிய உயர் கல்விச் சபையும் தமிழரசுக் கட்சியும் ரோயல் கமிஷன் நிறுவும் திட்டத்தை கடுமையாக எதிர்த்து வந்தது தெரிந்ததே.

பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டிய இடப் பிரச்சினையொன்றைத் தவிர தமிழ்க்கட்சிகளும், தமிழ் பேசும் மக்களும் தமக்கென பூரணத்துவமுள்ள பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென்ற கோரிக்கையில் ஒன்றுபட்டு நிற்பதால், மேலும் இக் கோரிக்கையைத் தட்டிக் கழிப்பது தமிழ் மக்களின் வெறுப்புக்கே வழி வகுக்கும் என அரசாங்கம் இப்போது சிந்திக்க தொடங்கியுள்ளதாம்.

ரோயல் கமிஷன் நிறுவும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டு விட்டதைத் தொடர்ந்து தமிழ்ப் பகுதியில் ஓர் பூரணத்துவ பல்கலைக் கழகம் நிறுவுவது சம்பந்தமாக தமிழரசுக் கட்சித் தூதுக் குழு இம்மாதம் 14ந் திகதி பிரதமரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த விருக்கிறது.

இப் பேச்சுவார்த்தையின் போது மேலும் தாமதமின்றி உடனடியாக தமிழ் பேசும் மக்களுக்கென ஒரு பூரண பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டுமென பிரதமரிடம் தமிழரசுக் கட்சி வலியுறுத்தவிருக்கிறது.

சிங்கள அறிவு தேவையற்ற அரசாங்க ஊழியர்கள் சிங்கள அறிவு கோரப்பட்டு அநீதியாக வேலை நீக்கம் செய்யப்படுதல், புதிய ஊழியர் முது முறையைப் பாதிக்கும் திறைசேரிச் சுற்றறிக்கை, கிந்திலூற்றுக் காணிகள் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டமை, போன்ற தமிழ் மக்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சினைகளும் இச் சந்திப்பின் போது விவாதிக்கப்படுமெனத் தெரிகிறது.

இப் பிரச்சினைகள் மீது தமிழ் மக்களுக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டுமென்றும் இல்லாவிடின் நீதியைப் பெற தமிழரசுக் கட்சி வேறு நடவடிக்கைகள் எடுக்கவேண்டி வருமென்றும் தூதுக்குழு பிரதமரிடம் தெரிவிக்குமென்று தெரிகிறது.

## ஜீ. ஜீ. யின் முகமூடி மல்லாவியில் கிழிந்தது!

வவுனியாத் தொகுதியில் உள்ள உடையார் கட்டு என்ற குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுப் பத்து ஆண்டுகளாகி விட்டன. இப் பகுதி ஆனைப்பந்திக் கட்சியின் தொகுதியாகவுமுள்ளது. இங்கு வாழும் மக்கள் யாழ்ப்பாணத்தவர்கள் என்ற காரணத்தினாலோ என்னவோ இவர்களுக்கு காடு வெட்ட, வீடுகட்ட, கிணறு கட்ட மற்றும் பாதை,

(9ம் பக்கம் பார்க்க)

## ரம்ழான் வாழ்த்து

நமது இஸ்லாமிய வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் புனித ரம்ழான் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். —ஆர்.

நயினாதீவில்

## சிங்கள ஆசிரியர் நியமனத்திற்கு தமிழரசுக்கட்சி கடும் எதிர்ப்பு!

நயினாதீவிலுள்ள பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று நயினாதீவு கிராமசபை நிறைவேற்றியுள்ள ஒரு தீர்மானத்திற்கு தமிழரசுக் கட்சியின் நயினாதீவுக் கிளை பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக கல்வி திணைக்களத்துக்கு தமிழரசுக் கிளைத் தலைவர் திரு அ. நல்லையா எழுதியுள்ள கடிதத்தில் நயினாதீவுப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதாக இருந்தால் அதற்கு முன் பெற்றோரின் சம்மதத்தைப் பெறவேண்டுமென்றும், சிங்கள ஆசிரியர் நியமிக்கும்படி கோரியுள்ள தீர்மானம் பெற்றோருக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

அத்தியாயம் (14)

# கர்ப்பக் கிருகம்

கே. எஸ். ஆனந்தன்

வாழ்க்கையின் ஆனந்தமான பகுதியை மட்டும் பிரகாசுடன் அனுபவித்த அவளுக்கு பயங்கரமான பகுதியின் ஆரம்பம் தொடங்கி விட்டதாகவே கருதினாள். ஆகவேதான் எதுவுமே பேசத் தோன்றாதவளாக நின்றாள்.

அவனிடம் பொய் பேசினால் அதற்குரிய பலனை அனுபவிக்க வேண்டும் என்ற உண்மையை ஏற்கனவே அறிந்து கொண்டதாலே அவனிடம் பொய் பேசும் துணிவு ஏற்படவில்லை. ஆனாலும் முழுதாக உண்மை பேசவும் அவள் தயாராய் இல்லை. ஆகவே அப்போதைய சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக ஒரு சொட்டுக் கண்ணீரை சிந்திவிட்டபடி நின்றிருந்தாள்.

'என்ன கீதா நான் கேட்டதற்குப் பதில் இல்லையா?'

'அத்தான். நான்...... நான்......'

'நீ கருத்தடை வில்லைகளைப் பாவித்ததை எப்படி அறிந்து கொண்டேன் என்றுதானே கேட்கின்றாய். டாக்டர்தான் கூறினார். நான் ஏற்கனவே என்னைப் பரிசோதித்தறிந்து கொண்டேன். ஆகவேதான் உன் நிலையையும் அறிந்து கொள்ள விரும்பினேன். உன்னிடம் எப்படிக் கேட்பது என்று நான் தயங்கிய பொழுதுதான் புனிதம் வந்தாள். அவள் கேட்ட வேளையில் உன்னைக் கேட்டேன். நீ மறுத்ததற்கும், டாக்டர் சொன்னதற்கும் சம்பந்தமிருப்பதாகதான் நான் நம்புகிறேன்.'

'தெரியாத்தனமாக சில...'

'கீதா. படித்த பெண்களெல்லாம் நாகரீகத்தின் பெயரால் இப்படித்தான் தவறுகள் செய்கின்றனர். நீ படித்தவள். பண்புள்ளவள் என்று நம்பினேன் நானு பண்புள்ளவள் என்று கேட்க வேண்டும் போலிருந்தது. கீதாவுக்கு. ஆனால் எதுவுமே பேசாமல் மனதை அடக்கிக் கொண்டு விம்மினாள்.

'அத்தான் தெரியாத்தனமாகச் செய்துவிட்டேன் என்னை மன்னித்து விடுங்கள்' என்று அவள் பாதங்களைப் பற்றிக் கொண்டே அழுதாள்.

'கீதா. திருமணமான பின்பா அதற்கு முன்பா உபயோகித்தாய்?'

'திருமணத்துக்கு ஒரு மாதத்திற்கு முன்பு'

'கருத்தடை வில்லைகளை தந்தது யார்?'

'அக்கா'

'ஓ... அதுதான் அவள் வருடம் ஒரு குழந்தை பெறுகின்றாளோ?'

'அத்தான் நீங்களா...'

'நானா இப்படிப் பேசுகின்றேன் என்று கேட்கின்றாய். இல்லையா? என் மனைவியான நீ இப்படிச் செய்யும் பொழுது நான் கேட்டதில் என்ன தவறு கண்டாய்? எதற்காக கருத்தடை வில்லைகளை உட்கொண்டாய் என்பது உனக்கே தெரியாதா?'

'அத்தான்!' நடுங்கினாள் கீதா.

'நான் மன்னித்தாலும் கடவுள் உன்னை மன்னிக்க மாட்டார் கீதா. திருமணம் என்பது ஒரு தெய்வீக உறவு முன்னர் அறிமுகமில்லாத இருவரின் சங்கமத்தில் தோன்றும் புதிய உறவில் ஓர் ஜீவப்படைப்பே நிகழ்கின்றது. இக்காரணத்தினால் தான் திருமணத்தைப் புனிதச் சடங்கு எனக் கொள்கின்றனர். நீயோ! என்ன செய்துவிட்டாய் கீதா' விழிகள் கலங்கிக் குளமாகின.

'அத்தான் உடம்பு சுகமில்லாத வேளையில் இப்படி மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள்'

வெளி வாசற் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. உடனே கீதா எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

'என்ன கீதா? பிரகாஷிற்கு சுகயீனம் என்று எழுதனீராம். உங்கள் அக்கா வரமுடியாத நிலையில் என்னைத் தனியே போய்ப் பார்த்து வாருங்கள் என்று நச்சரித்தாள்.'

'வாருங்கள்'

'என்ன கீதா ஒருமாதிரி இருக்கின்றாய்?'

'என்ன...' என்று கேட்டவள் எதுவுமே பேசாமல் சென்றாள்.

'ஓ... நீங்களா வாருங்கள்' என்றான் பிரகாஷ்.

'சுகயீனம் என்று...' என்றான் அருமைநாயகம்.

'மனைவியோ, பிள்ளைகள் யாரும் வரவில்லையா?'

'இல்லை. மனைவி பஸ்ஸில் பிரயாணம் செய்யமுடியாது.'

'ஓ... மறந்துவிட்டன்'

'அது சரி என்ன சுகயினம்?'

'சும்மா மனம் சரியில்லை.'

'உங்கள் மனைவிகூட கருத்தடை வில்லைகளை உபயோகித்தார்களா?'

'என்ன கேட்டீர்கள்.'

நடைபெற்ற விடயங்களைப் பிரகாஷ் கூறிய பொழுது அருமைநாய பதறிப் போனான். எதுவும் செய்ய முடியாத நிலை

'மிஸ்டர் பிரகாஷ். இதையெல்லாம் பெரிதுபடுத்தாதீர்கள்' என்று ஆறுதலளித்தான்.

இரவு அமைதியாய் உறங்கிக்கொண்டிருந்தான் பிரகாஷ். அதே வேளையில் ஓர் அறையில் அருமைநாயகம் பிரகாஷ்கூறிய விடயங்களைக் கீதாவிடம் கூறிக்கொண்டிருந்தான்.

'கீதா நீ ஒன்றுக்கும் யோசிக்காதே. எல்லாம் நான் கவனித்துக்கொள்கின்றேன்' என்று கூறிவிட்டு எழுந்தான்.

அதே வேளையில் அறையில் எரிந்துகொண்டிருந்த மின்சாரம் திடீரென அணைந்தது.

'கீதா' என்று அவள் கரங்களைப் பற்றினான் அருமைநாயகம்.

'என்ன இது விடுங்கள் கையை' என்றாளே தவிர அவனிடமிருந்து கையைப் பறித்துக்கொள்ளவில்லை.

அடுத்த கணம் இருளினூடே அவள் இடுப்பைச் சுற்றி வளைத்து வருடியது ஓர் கரம். கீதா தன்னை மறந்தாள் சில நாட்கள் கணவனுடன் உறவு எதுவுமின்றியிருந்ததினால் ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்புகள், முட்டி மோதி அமைதிபெற விளைந்தன.

மின்சாரக் கோளாறினால் அணைந்துவிட்ட மின் விளக்கு திடீரென ஒளிவீசியபோது கீதா மிரண்டுவிட்டாள். உணர்வுப் போதையினால் மயங்கிப்போன மூளையும், விழிகளும் சுயஉணர்வுற்றபோது அந்த அறையில உள்ள பிரகாஷின் படம் அவளைச் சுட்டெரித்துவிடுவது போன்று பார்ப்பதாக உணர்ந்தாள். அந்த அறையைவிட்டு வெளியே ஓடினாள் பிரகாஷ் நிலத்தில் விழுந்து துடித்துக்கொண்டிருந்தான்.

உணர்வுகள் செத்து மடிந்துவிட்ட நிலையில் கீதா விம்மினாள். பிரகாஷின் நிலை அவளை நிலைகுலையச் செய்துவிட்டது. அவன் மீது அவள் உயிரையே வைத்திருந்தாள். ஆனால்... ஆனால்...?

'அத்தான்... அத்தான்...'

பிரகாஷ் கண்களை மெல்லத்திறந்தான். அவளை உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வை அவளைச் சுட்டுப் பொசுக்கிவிடுவது போன்றிருந்தது.

'அத்தான்: ஏன் அத்தான் எழுந்திர்கள்.'

'நீ எங்கே போயிருந்தாய்?'

அவள் அடிவயிற்றில் தீப்பற்றி எரிவதுபோன்றிருந்தது. நாடி நரம்புகளில் ஓடிய அசுர உணர்வுகள் வேட்கைப் போராட்டத்தில் இழந்துவிட்ட நிலையில் தடுமாறிய அவள் மனம் அவனுடைய கேள்வியால் நிலைகுலைந்துவிட்டது.

'அத்தான் நான்... நான் பாத்ரூமிற்கு'

'ஓ... நான்... கூட அங்கே போவதற்குத்தான் வந்தேன். கால் தடுமாறிவிட்டது' என்றான்.

பெண்கள் பார்ப்பதற்கு பாபிகளாயிருந்தாலும், பாவத்துக்குத் துணிந்தவர்கள். இந்த உலகில் எதற்குமே அஞ்சாத துணிகரப் பேர்வழிகள். அவள் தான் தப்பிக்கொள்வதற்காக எதையுமே செய்யத் தயங்காள். எந்தப் பொய்யையும் துணிகரமாகச் சொல்வாள். ஆனால்—?

கீதா பிரகாஷிடம் உயிரையே வைத்தாள். அவனிடம் வைத்த பாசம் அவளைப் பைத்தியக்காரியாக்கிவிட்டிருக்கும்—திருமணம் நடந்திருக்காது போனால். ஆனால் ஏனோ அவள் உணர்வுகள...?

'கடவுளே நான் பெரிய கொடுமைக்காரி. அவர் சுகயீனத்துடன் போராட நான்... நான்... என் மனம் ஏன் இப்படி... சீ... சீ... அவள் தன்னையே வெறுத்தாள். அவன் தன்னை வெறுப்பானோ என்று பயந்தவள் தன்னையே தான் வெறுக்கத் தொடங்கினாள். அதே வேளையில் பொலிடோலோ வேறு ஏதும் இருந்திருந்தால் பருகித் தன்னை அழித்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் பிரகாஷ் அவளிடம் அன்பு காட்டும்வரை, அவனை அவளால் வெறுக்கவோ, பிரிந்து போகவோ முடியாது.

காலையில் வந்த கடிதங்களைப் பிரித்துப் படித்தபோது புனிதத்துக்கு தலையே சுழல்வது போன்றிருந்தது. கலங்கிய விழிகளுடன படுத்திருக்கும் பிரகாஷின் எழிற்கோலத்தை தன் நினைவில நிறுத்திப்பார்த்தாள்.

'பிரகாஷ்' அவள் குரலில் அவனுடைய பெயரை உச்சரிக்கும்போது ஓர் தனித்துவமான மயக்கக் கிறக்கம்.

'வாழ்க்கை மனிதர்களுக்காக அமைக்கப்பட்ட ஒரு போட்டிப் பரீட்சை. அதில் பரீட்சை எடுக்காமலே தோற்றுவிட்டாய் நீ. நான் பரீட்சை எடுத்தே தோற்றுவிட்டேன். 'என்று ஆரம்பித்து, மனைவியின் கோளாறுகள் பற்றி எழுதியிருந்தான்.

'புனிதம். நீ என் புனிதமாக அன்று சம்மதம் தந்திருந்தால் இன்று எங்கள் நிலையைக் கற்பனை செய்துபார்.'

புனிதத்தின் நினைவுகள் சிலந்தி வலைபின்ன ஆரம்பித்துவிட்டன. பிரகாசுடன் அவள் மானசீகமாக உறவாடினாள். இருவரும் ஒன்றாக இணைந்து, பிணைந்து பறந்தார்கள்.

வாழ்வின் ஒவ்வொரு சிறு சிறு அணுவையும் அனுபவித்தார்கள.

'புனிதம்... ... நீ...... என்...

'பிரகாஷ்' அவள் சுருண்ட முடிகளை வருடிவிட்டாள். அதற்குமேல் அவளால் நினைத்தும் பார்க்கமுடியாது போய்விட்டது.

மீண்டும் கடிதத்தைப் படித்தாள். அவனுடைய ஒவ்வொரு வசனமும் அவள் இன்ப உணர்வுகளை சுண்டிவிட்டு இனியநாதம் எழுப்பின.'

'புனிதம் நீ உன் தாயின் வேண்டுகோளுக்காக என் கோரிக்கையை நிராகரித்தபோதும் நான் அவசரப்பட்டுவிட்டேன். அதற்கான பலனை அனுபவிக்கின்றேன்.'

'இல்லைப் பிரகாஷ் இல்லை; நான்தான் அவசரப்பட்டுவிட்டேன்.

அம்மாவின் நலனைக் கருத்தில் கொண்டு முதலில் ஓம் சொல்லிவிட்டபோதும் நிமிடத்துக்கு நிமிடம் நான் செத்துக் கொண்டுதானிருந்தேன. அதுமட்டுமல்ல நீங்கள தனித்திருந்தால் என் மனம் தடுமாறிடுமோ என்றுதான உங்களைத் திருமணம் செய்ய வற்புறுத்தினேன்.

(9ம் பக்கம் பார்க்க)

## அதுதான் தெரியுமே!

நான் இந்து சமயத்தை வளர்ப்பதற்காக இந்துப்பல்கலைக் கழகம் கோரவில்லை—ஜீ. ஜீ.

—......ஆனால் ஒன்றுபட்டுள்ள தமிழ் பேசும் மக்களை இந்து, கிறிஸ்த்தவர், இஸ்லாமியர் என்று கூறுபோடவே இந்துபல்கலைக் கழகம் என்றுதாங்கள் கூச்சல் போடுகிறீர்கள் என்ற உண்மை இந்துக்களுக்கு நன்கு தெரியுமே!

## பொருத்தமான இடம்

சுங்கிலியன் தோற்ற இடத்தில் முதன் முதலில் சுயாட்சிக் கழகக் கொடிபறக்கவிடப்பட்டது— —செய்தி

—நவரத்தினம் கழகத்தின் எதிர்காலம் எப்படியிருக்கப் போகிறது என்பதை கொடியைப் பறக்கவிட தேர்ந்தெடுக்கப்பட்ட இடமே வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டதே!

## அரிசி மூடையும் புழுகு மூடையும்

யாழ் ஆஸ்பத்திரிக்கு திருமதி பொன்



னம்பலம் ஆறு மாதத்துக்கு போதுமான அரிசி வழங்கினர் —செய்தி

—தேர்தல் நெருங்க நெருங்க திரு. பொன்னம்பலம் அவிட்டு விடப் போகும் புழுகு மூட்டைகளுக்கு முன் இந்த அரிசி மூடை எம் மாத்திரம்?

## பிரதமர் சொன்னது

தமிழ் மக்களுக்காகவோ பொதுவான பிரச்சினைகளைத் தீர்க்கும் எண்ணத்துடனே எந்த ஒரு தமிழ்த்தலைவனும் இயங்கவில்லை என்று காங்கேசன் துறைமுக அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய பிரதமர் சொன்னார்—ஜீ. ஜீ.

—மாவட்ட சபை, தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்றவற்றுக்கு திரு. பொன்னம்பலம் முட்டுக் கட்டை போட்டதைத் தான் அவர் அப்படி எடுத்துக் காட்டியிருக்கலாம் என்கிறார் கட்சி சார்பற்ற ஒரு தமிழர்.

## ஆனால்......

நாம் யார்க்கும் குடியல்லோம்'—தமிழ் காங்கிரஸ் ஏடு

—ஆனால் யூ. என்' பிக்கே குடியாவோம்!

## 65 பவுண் சங்கிலி

வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை பட்டினி, எனப் பல பிரச்சினைகள் மத்தியில் தமிழர் வாழ்கின்றனர்—ஜீ. ஜீ.

—முன்பு இவர்கொடுத்த வாக்குறுதிப்படி 65 பவுண் தங்க மாலையில் தொழிற்சாலையமைத்துசில ஆயிரம் பேருக்காவது முதலில் வேலை கொடுக்கட்டுமே என்கிறார் யாழ்ப்பாணத் தொகுதியைச் சேர்ந்த படித்த வேலையற்ற வாலிபர் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இ. இராசமாணிக்கம்,
புங்குடுதீவு.

கே: மரம் விட்டு மரம் பாயும் மந்திபோல மதி கெட்டு அலையும் சுயாட்சிக் கழகம் தீவுப் பகுதியில் வெற்றிபெறும் என்று மலை போல ஆசையை வளர்த்து வருபவர்களுக்கு தாங்கள் கூறும் உபதேசம் என்ன?

ப: தீவுப்பகுதி பெருமக்கள் தமிழரசுக் கட்சிக் கொள்கையிலூறியவர்கள். கட்சிக் கொள்கையைக் காட்டிக்கொடுத்து — கட்சியை அழிப்பதற்காகப் புதுக்கழகம் தொடங்கியவரை படுதோல்வியடையச் செய்து அரசியல் அரங்கிலிருந்தே விரட்டியடிப்பார்கள்; மீண்டும் தமிழரசுக் கட்சியின் மூவண்ணக் கொடியை காவ ஆரில் நிலைநாட்டுவார்கள் என்பதில் எனக்கு சிறிதும் ஐயமில்லை.

ஃ

மாறன்,
கைதடி.

கே: தமிழர் சுயாட்சி பெறுவதற்காக கடந்த 20 ஆண்டு காலமாக சொல்லாலும் செயலாலும் உள்ளத் தூய்மையுடன் உழைத்து வரும் தமிழரசுக் கட்சியை கண்டித்து முன்னுள் மூலை புதிய கழகம் தொடங்கிய தன் நோக்கம் என்ன?

ப: தமிழரசுக் கட்சியை அழித்துவிடவேண்டு மென்ற அப்பட்டமான சுயநலம் தான்! தமிழரசுக் கட்சியை அழிக்க முயலுவதன்மூலம் தமிழினத்தை அடிமைப் படுத்த விரும்பும் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு இப்போது தன்னையறியாமலே உதவியளிக்க புறப்பட்டிருக்கிறது 'மூலை'!

ஃ

செ. நவரத்தினராஜா,
கொட்டாஞ்சேனை.

கே: காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி பற்றி தேசிய சேவைகள் அமைச்சினுல் வெளியிடப்பட்ட (ஏரிக்கரை பத்திரிகை) அனுபந்தங்களில் காங்கேசன் துறைப் பாராளுமன்றப் பிரதிநிதியான தந்தை செல்வாவின் செய்தி சேர்த்துக்கொள்ளப்படாமலும், யாழ்ப்பாண தனிப்பெருந் தலைவரின் செய்தி கொட்டை எழுத்துக்களிலும் பிரசுரமாகியுள்ளதே! காரணம் என்ன? ஏரிக்கரைப் புலம்பல் (ஆங்கில, தமிழ்) ஏடுகள் செத்துக்கொண்டிருக்கும் தமிழ் காங்கிரசுக்கு விளம்பரம்தேட முனைகின்றனவா?

கே: ஆமாம் யூ. என். பி. தமிழ்காங்கிரசின் ஊதுகுழல்கள்தான் ஏரிக்கரை ஏடுகள் என்பது புதிய ஒரு செய்தி அல்லவே! ஆனுல் செத்த தமிழ் காங்கிரசுக்கு உயிரூட்ட ஏரிக்கரை ஏடுகளால் மட்டுமல்ல வேறு யாராலும் இனி முடியாது!

ஃ

நா- சுந்தையா,
ஒட்டமாவடி.

கே: பொன்னம்பலத்தின் தமிழுணர்ச்சி பற்றி என்ன கருதுகிறீர்கள்?

ப: அதுதான் அவரே கூறிவிட்டாரே, தமிழ் தமிழ் என்று பேசினுல் சிங்களவர்களின் பகைமைதான் வளருமென்று! இதிலிருந்து அவரது "தமிழுணர்ச்சி" தெரியவில்லையா?

கே: தமிழ் காங்கிரசின் கொள்கை தமிழ் மக்களுக்கு உகந்ததா? அதன் கொள்கை எப்போதாவது நடைமுறைக்கு வருமா?

ப: தமிழ் காங்கிரஸ் கொள்கையான ஒற்றையாட்சி அரசியல் முறை தானே கடந்த 21 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கிறது! அதன் பலாபலன் தானே தமிழினத்தின் இன்றைய அவலநிலை!

ஃ

வி. கனேஸ்வரன்,
நெடுங்கேணி.

கே: சமஷ்டியையும், இ. தி. மு. க வையும் எதிர்த்து ஆர். ஜியும் ஜீ. ஜீயும் ஒரே தினத்தில அறிக்கைகள் விட்டார்களே இதன் ஒற்றுமை என்ன?

ப: தமிழ் தேசிய உணர்வுகளை மட்டந்தட்டுவதில் இரு 'ஜீ' க்களும் ஒன்றுபட்டிருக்கின்றன என்பதுதான்!

கே: நீர் ஏன் சிரித்தபடி இருக்கிறீர்?

ப: நீங்கள் சிரிக்க வேண்டும் என்பதற்காக!
எஸ். எஸ். தவராஜா,
மட்டுவில் தெற்கு.

கே: தமிழரசுக்கட்சி செல்வாக்கிழந்துவிட்டதாக திரு. குமாரசுவாமியவர்கள் பிரசாரம் செய்து திரிவது ஏன்?

ப: அப்படிப் பொய் சொல்லியாவது தமது செல்வாக்கைக்கூட்டிக்கொள்ள முடியாதா என்ற நப்பாசை தான்!

ஃ

ப. ஆ. திலகர்,
காரைநகர்.

கே: பன்னிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்திற்கு தமது பூரண ஆதரவைக் கொடுத்தும் சாதாரண மாவட்ட சபைகளைக் கூட பெறமுடியாத இந்த ஒற்றையாட்சியின் கீழ் தமிழ்க காங்கிரஸ் எவ்வாறு தமிழினத்தின் இழந்த உரிமைகளைப் பெற்றுத் தரும் என்று நாம் நம்ப முடியும்?

ப: நம்புங்கள் என்று நாம் கூறவில்லையே!

கே: சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத்தில கட்டாய நாடு கடத்தலுக்கு இடம் உண்டா?

ப: இடையாது!

கே: ஈழத்தமிழினம் விடுதலை அடைய தமிழ்க் காங்கிரஸ் கூறும் மார்க்கம் என்ன?

ப: விடுதலையடையவா? சிவ சிவா...! அடிமையாக வாழ அல்லவா அது மார்க்கம் கூறுகிறது!

கே: பண்டா- செல்வா ஒப்பந்தத்தை ஜீ. ஜீ. எதிர்த்த தேன்?

ப: தமிழரசுக்கட்சி எதையும் சாதித்துவிடக்கூடாது என்ற அரசியல் பொருமையால்தான்!

ஃ

ஈழத்தமணி,
திருமலை.

கே: தமிழ் நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களின் 'இலங்கைப் பயணம் தேர்தல் பிரசாரத்திற்கு வழி வகுக்கும் என இங்கே குரல் எழுப்பியோர் போக்குவாதிகளுக்கு ... தான் இலங்கை வராது ...

எதிர்ப்பும் ஒரு பிரசாரம் தானே என்ற அவரது சாட்டையடி எப்படி இருக்கிறது?

ப: சூடும் சுவையும் உள்ள பதிலாக இருக்கிறது! அண்ணுவின் தம்பியிடமா வாய்கொடுத்து தப்பமுடியும்?

கே: பொன்னம்பலம் அவர்களின் அ. இ. த. கா. கட்சிக்கு சிண்டிக்கேட்கட்சி என வைத்துவிட்டால் என்ன?

ப: ஆகா, பொருத்தமான அழகான பெயர் தமிழ் காங்கிரசுக்கு! சூட்டி விடுவோமே!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.


# மேலும் ஸ்னோவைட் பரிசுகள் பெறுங்கள்

1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக் குள்ளர்வரை, ஸ்னோ-வைட் சோப் மேலுறைகளில் அச்சிடப்பட்டிருப்போர், ஸ்னோ-வைட் விடுகதை போட்டியில், பின்வரும் மாபெரும் பரிசுகளைப் பெற்றுத் தருவார்கள்.
1-ம் பரிசு 1500 ரூபாவும், இளேசியோ குளிர்பெட்டி ஒன்றும்.
2-ம் பரிசு 1000 ரூபாவும், சிங்கர் தையற்பொறி ஒன்றும்,
3-ம் பரிசு 500 ரூபாவும், தங்கப் பவுன் காப்பு இரண்டும்.
12 தேற்றுப் பரிசுகள்: ஒவ்வொன்றும் 50 ரூபா பெறுமதி உள்ளவை.
1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 7-ம் சித்திரக் குள்ளர்வரை, உள்ள சித்திரக் குள்ளர் படங்களைக் கொண்ட தொகுதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு டபிள் ஷீட் அல்லது ஒரு சாரிப் புடவை உங்களுக்குப் பரிசாகக் கிடைக்கும். விரும்பியதை (நீங்கள் தெரிந்தெடுக்கலாம்). ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பரிசு கிடைக்கும்.
1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 7-ம் சித்திரக் குள்ளர்வரை, உள்ள சித்திரக் குள்ளர் படங்களுடன் ஸ்னோ-வைட் இளவரசியின் படத்தையும் கொண்ட ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு சிங்கர் தையற் பொறி உங்களுக்குக் கிடைக்கும். ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பரிசு கிடைக்கும்.




...மாதத்தோறும், 1-ம் சித்திரக் குள்ளர் ... 6-ம் ... வரையுள்ள சித்திரக் குள்ளர்கள், மேலதிகமான பின்வரும் பரிசுகளை ...களுக்குப் பெற்றளிப்பார்கள். ஒவ்வொரு மாதமும் கிடைக்கப்பெறும் மிகத் துப்பரவான பிரவேசப் பத்திரத்தினை அனுப்பிவைப்பவர்களுக்கு (ஸ்னோ-வைட் விடுகதை)
1-ம் பரிசு: 250 ரூபா. 2-ம் பரிசு: 100 ரூபா.
5 தேற்றுப் பரிசுகள்: ஒவ்வொன்றும், பி. சி. சி. பரிசிற் குவைப்பெட்டி ஒவ்வொன்று.
மாதந்தோறும் ஆகக் கூடிய பிரவேசப் பத்திரங்களை, ஸ்னோ-வைட் மேலுறைகளுடன் அனுப்பி வைப்பவர்களுக்கு
(ஒரே கடித உறையினுள் வைத்து அனுப்பப்பட வேண்டும்).
1-ம் பரிசு: 750 ரூபா. 3 தேற்றுப் பரிசுகள்: ஒவ்வொன்றும் 50 ரூபா பெருமதியுள்ளவை.

விதிகள்

1. இப்போது, ஸ்னோ-வைட் விடுகதைப்போட்டியிலே பரிசு பெறுவதற்கு நீங்கள் செய்யவேண்டியது.—பின்னதாகத் தரப்பட்டிருக்கும் பிரவேசப்பத்திரத்திலே கொடுக்கப்பட்டுள்ள எளிதான வினுக்கள் இரண்டுக்கும் விடையளித்தல் வேண்டும். உங்கள் பெயரினையும் முகவரியினையும் எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும், ஒவ்வொன்றும் வெவ்வேறன (1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக் குள்ளர்வரை) 3 சித்திரக் குள்ளர்களின் படங்களைக் கொண்ட ஸ்னோ-வைட் மேலுறைகளைச் சேர்த்து "ஸ்னோ-வைட் விடுகதை, த. பெட்டி இல. 631, கொழும்பு" என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையினுள் வைத்தனுப்பப்படும் ஸ்னோ-வைட் மேலுறைகளின் தொகையினை, உறையின் பின்புறத்தில் எழுதி விடுதல் வேண்டும்.
2. ஆகக் கூடிய ஸ்னோ-வைட் மேலுறைகளுக்கான பரிசுகளைப் பெறுவதற்கு, நீங்கள் அனுப்பும் ஸ்னோ-வைட் மேலுறைகளையெல்லாம் ஒரே கடித உறையினுள் வைத்து, உங்கள் பெயர் முகவரி ஆகியவற்றையும் எழுதி, "ஸ்னோ-வைட் மேலுறைகள், த. பெட்டி இல. 631, கொழும்பு" என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையினுள் வைத்தனுப்பப்படும் ஸ்னோ-வைட் மேலுறைகளின் தொகையினை, உறையின் பின்புறத்தில், எழுதிவிடுதல் வேண்டும். பிரவேசப் பத்திரங்களுக்கான முடிவு தேதி மாதந்தோறும் மாத இறுதித் தேதியாகும்.
3. துப்பரவான பிரவேசப்பத்திரங்களுக்கான பரிசுகள், மாதந்தோறும் கிடைக்கப்பெறும் பிரவேசப் பத்திரங்களிலிருந்து, துப்புரவினைமட்டும் நோக்கி, வழங்கப்படும். பிரவேசப் பத்திரங்களுக்கான முடிவு தேதி மாத இறுதித் தேதியாகும்.
4. மாபெரும் பரிசுகளுக்கான, பிரவேசப் பத்திரங்கள், விடைகளின் சரிபாட்டினையும், துப்புரவினையும் நோக்கி வழங்கப்படுவனவாகும். அவற்றுக்கான முடிவு தேதி 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியாகும்.
5. 7 சித்திரக் குள்ளர் படங்களைக் கொண்ட ஸ்னோ-வைட் மேலுறைத் தொகுதிகளும் (டபிள் ஷீட் அல்லது சாரிப் புடைவை என நீங்களே தெரிவுசெய்தல் வேண்டும்), ஸ்னோ-வைட் இளவரசியினதும் 7 சித்திரக் குள்ளர்களினதும் படங்களைக் கொண்ட ஸ்னோ-வைட் மேலுறைத் தொகுதிகளும், உங்கள் பெயர் முகவரி ஆகியவற்றுடன்-பதிவுத்தபால்-பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:-
ஸ்னோ-வைட் பரிசில்கள்,
ஏ. ஜே. என். செனிவிரத்ன அன்ட் சன்ஸ்,
60, ஆனந்த குமாரசுவாமி வீதி,
கொழும்பு-3.
6. ஸ்னோ-வைட் போட்டிகளில், பி. சி. சி. லிமிற்றெட் தாபனத்திலும், ஏ. ஜே. என். செனிவிரத்தின, அன்ட் சன்ஸ் தாபனத்திலும் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது குடும்ப உறுப்பினரும் தவிர்ந்த இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.
7. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. கடிதப் போக்குவரத்து எதுவும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.
இதோ, ஸ்னோ-வைட் விடுகதைப் போட்டிக்கான பிரவேசப் பத்திரம்:-

—வெட்டுக அல்லது படி செய்க—
1. பி. சி. சி. ஸ்னோ-வைட் சோப் நறுமணங் கொண்ட பல காரியார்த்த சோப். ஸ்னோ-வைட் சோப்பினை ஒப்பனைச் சோப்பாக உபயோகிக்கிறீர்களா? (ஆம் அல்லது இல்லை) ______
2. பி. சி. சி. ஸ்னோ-வைட் மேலுறையில் அச்சிடப்பட்டுள்ள சித்திரக் குள்ளர்களுள் தாடியும் கண்ணாடியும் உடையவர் எவர்? இல. ______
பெயர் ______
முகவரி ______
______
தபால் அலுவலகம் ______

இப் பிரவேசப் பத்திரத்துடன், (1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக் குள்ளர் வரை உள்ளவர்களுள்) ஒவ்வொன்றும் வெவ்வேறன 3 சித்திரக் குள்ளர்களின் படங்களைக் கொண்ட 3 ஸ்னோ-வைட் சோப் மேலுறைகளை வைத்தனுப்புதல் வேண்டும்.



**வெண்மைக்கும் பிரகாசத்துக்கும் பி. சி. சி. ஸ்னோ வைட் பல் காரியார்த்த சோப்பினை உபயோகியுங்கள்.**

BCC
AJRS BCC 744


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தலைநகரத் தேர்தலும் தமிழ் மக்கள் கடமையும்

ஈழத்தின் தலைநகரான கொழும்பு மாநகராட்சி மன்றத்தின் தேர்தல் இம்மாதம் பதினைந்தாம் திகதி நடைபெறுகிறது. இத்தேர்தலில் யூ. என். பி. வேட்பாளர்களும் கூட்டுக் கட்சிகளின் வேட்பாளர்களும் கடுமையான பலப் பரீட்சையில் ஈடுபட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்சியடைப்படையில் நடைபெற்றாலும், பரந்த அரசியற்கொள்கையினடிப்படையில் நடைபெறுவது கிடையாது. ஒரு குறிப்பிட்ட கட்சி உள்ளூராட்சி மன்றத்தைக் கைப்பற்றுவதால் நாட்டின் தலைவிதியை நிர்ணயித்துவிடவும் முடியாது. ஆனால் அரசியற் காற்று அடுத்த பொதுத்தேர்தலின் போது எந்தப்பக்கமாக வீசவிருக்கிறது என்பதை ஓரளவு ஊகித்துக் கொள்ள கட்சியடிப்படையில் நடைபெறும் உள்ளூராட்சி மன்றத்தேர்தல் முடிவுகள் உதவலாம்.

கொழும்பு மாநகரில் கணிசமான அளவில் வாழும் தமிழ் மக்கள் மாநகராட்சி மன்றத்தேர்தலில் யாருக்கு வாக்களிக்கலாம்? வாக்களிக்க வேண்டும்? என்ற ஒரு கேள்வி எழுகிறது!

தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் யூ. என். பியும் சரி, கூட்டுக்கட்சிகளும் சரி ஓரே குட்டையில் ஊறிய மட்டைகள் தாம் என்பதை தமிழினம் இப்போது அனுபவரீதியாக அறிந்துகொண்டு விட்டது!

எந்தச் சிங்களக் கட்சியும்- அது யூ. என். பி. என்றாலும் சரி, கூட்டுக்கட்சிகள் என்றாலும் சரி- தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றுமானால் தமிழினத்தைக் காலில் போட்டு மிதிக்க கொஞ்சம் கூடத் தயங்காது என்பதைக் கடந்த காலங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் ஐயத்துக்கிடமின்றி நிரூபித்துவிட்டன. தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டியேற்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே சிங்களக் கட்சிகள் ஓரளவு தமிழ் மக்களை மதிக்கவும், வேண்டா வெறுப்புடனேனும் சில பல உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கவும் முன் வந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

இதிலிருந்து தமிழ் மக்கள் உணர வேண்டிய உண்மையென்னவென்றால், தென்னிலங்கையில் நடைபெறும் எந்தத் தேர்தலிலும் எந்த ஒரு சிங்களக் கட்சியும் தனிப்பெரும்பான்மையுடன் வெற்றியீட்டி ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய முறையில் தமது வாக்குரிமைகளை பிரயோகிக்கக்கூடாது என்பதே. இரு பெரும் சிங்களக்கட்சிகளுக்கிடையிலும் சமபலத்தினை வைத்திருந்தால் மட்டுமே அவை தமிழினத்தை மதித்தே தீர வேண்டிய சூழ்நிலை எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கும்! இதை தமிழ் மக்கள் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது!

அடுத்து உள்ளூராட்சி மன்றங்களும் சரி, பாராளுமன்றமும் சரி திறம்பட இயங்குவதற்கு எதிர்க்கட்சியும் அரசாங்கக்கட்சியும் ஏறத்தாழச் சமபலமுள்ளவையாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் மக்களாட்சி முறையும் சீராக செயல்பட முடியும்.

கலைக்கப்பட்ட கொழும்பு மாநகராட்சி மன்றத்தில் எதிர்க்கட்சியின் பலம் மிகவும் குறைந்தும் ஆளுங்கட்சியின் பலம் அளவுக்கதிகமாகவும் அமைந்திருந்தது. இது நகரின் ஆரோக்கியமான நிர்வாகத்துக்கு உகந்ததாக இருக்க முடியாது.

எனவே, இவற்றைக் கூர்மையுடன் சிந்தித்து கொழும்பு வாழ் தமிழ் மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவார்களாக!

---

# டெயிலிநியூசின் சின்னத்தனம்!

இந்நாட்டின் பழம்பெரும் ஆங்கிலத் தினசரியும் பொறுப்பு வாய்ந்த பத்திரிகை என்று கூறப்படுவதுமான 'டெயிலி நியூஸ்' தனது ஆசிரியத் தலையங்கமொன்றில் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி மீது வசைமாரி பொழிந்து தள்ளியிருக்கிறது. மிகவும் மட்டரகமான வார்த்தைகளால் கலைஞரைத் திட்டித் தீர்த்து மகிழ்ச்சியடைந்திருக்கிறது இந்த ஏடு.

கலைஞர் கருணாநிதி அவர்கள் சாதாரண நிலையிலிருப்பவர் அல்லர். இலங்கையைவிடப் பன்மடங்கு பெரியதும் நான்கு கோடி மக்களை உள்ளடக்கியதுமான தமிழ் நாட்டின் தலைவர். இந்திய அரசியல் வானில் கேந்திர ஸ்தானத்தை இன்று வகிப்பவர். இத்தகைய நிலையிலுள்ளவரை வெறும் கிள்ளுக்கீரை என்று நினைத்துக் கொண்டு தரக்குறைவான வார்த்தைகளால் ஏரிக்கரை ஏடு வைது தீர்த்திருக்கிறதென்றால்—பொறுப்பு வாய்ந்தது என்று பீத்திக் கொள்ளும் ஒரு பத்திரிகையில் இலட்சணமே இதுதானா என்று கேட்க விரும்புகிறோம். **தமிழக முதல்வர் மீது இப்படியொரு மட்டரகத் தாக்குதலை நடத்தியுள்ளதன் மூலம் ஈழத்துப் பத்திரிகை உலகுக்கே டெயிலி நியூஸ் அவமானம் தேடித் தந்து விட்டது.**

ஏரிக்கரை ஏடு, தமிழக முதல்வருக்கு எதிராகக் கக்கியுள்ள நஞ்சு கண்டு நாம் ஆச்சரியமோ, அதிர்ச்சியோ அடையவில்லை. ஏரிக்கரை நிறுவனத்துக்குத் தமிழ், தமிழர், தமிழ்நாடு, தமிழினம்—போன்ற வார்த்தைகள் எட்டிக்காயாகக் கசப்பது இன்று நேற்று ஏற்பட்ட ஒரு வருத்தமல்ல. இந்நாட்டில் தலைமுறை தலைமுறையாக வாழும் தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு—அபிலாஷைகளுக்கு எதிராகக் காலத்துக்குக் காலம் சிங்கள இனவெறியர்களைத் தட்டிக் கொடுத்து—தூண்டிவிட்டு வரும் ஏரிக்கரைப் பத்திரிகைகள் தமிழ் நாட்டு முதல்வரை திட்டித் தீர்த்திருப்பதில் அதிசயப்பட எதுவுமிருப்பதாக நாம் கருதவில்லை.

தமிழ்நாடு முதலமைச்சரைத் திட்டியதன் மூலம்—சிங்கள மக்களிடையே தனது தமிழ் விரோத—தென்னிந்திய விரோத மனப்பான்மைக்கு முத்திரை குத்திக் கொண்டிருக்கிறது டெயிலி நியூஸ். தி. மு. க., தமிழ் எதிர்ப்பு விஷயத்தில் ஏனைய எதிர்க்கட்சிப் பத்திரிகைகளைவிடத் தாமே முன்னணியில் நிற்பதாகக் காட்டிக் கொள்ள ஆசைப்படுகிறது ஏரிக்கரை நிறுவனம்!

கருணாநிதி பொதுத்தேர்தல் சமயத்தில் இங்கு வருவதால் எதிர்க்கட்சிகளின் கை ஓங்கிவிடும்; அரசாங்கத்துக்கு எதிராகப் பிரச்சாரம் நடத்த அது ஒரு வாய்ப்பாகிவிடும் என்று அலறியடித்து டெயிலி நியூஸ் ஆரம்பத்தில் ஒரு தலையங்கம் தீட்டியது. இதற்கு கலைஞர் கருணாநிதியவர்கள் சுடச் சுடப் பதில் அளித்தார். எனது வருகை பொதுத் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்படும் என்றால் நான் வராமல் விடுவதையும் அதற்குப் பயன்படுத்தலாமல்லவா என்று அவர் கேட்டிருந்தார்.

கலைஞரின் இக் கிடுக்கித்தாக்குதலுக்குப் பதில் சொல்ல முடியாமல் மாட்டிக்கொண்டு விழித்த 'டெயிலிநியூஸ்' கலைஞர் மீது வசைமாரி பொழிவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? அதனால் இப்பொழுது புதிய கூக்குரலை எழுப்பியிருக்கிறது. கலைஞர் இங்கு வருவது பொதுத்தேர்தலை எவ்விதமும் பாதிக்காது; ஆனால் அவரது விஜயம் இங்கு பதட்டநிலையைத் தோற்றுவிக்குமெனவும் அதன் பயனாகத் தோட்டத் தமிழர்கள் மீது சிங்கள இனவெறி கட்டவிழ்த்துவிடப்படலாம் என்றும் எச்சரித்திருக்கிறது 'டெயிலிநியூஸ்'

இப்படியெழுதுவதன் மூலம், கருணாநிதி இங்கு வந்தால் — மலையகத் தமிழர்கள் மீது பலாத்கார வெறித்தாக்குதலை நடத்துங்கள் என்று சிங்கள இன வெறியர்களை தூண்டிவிட ஏரிக்கரை ஏடு முயற்சிக்கிறதா என்று கேட்க விரும்புகிறோம்.

கருணாநிதி இங்கு வருவதால் தோட்டத் தமிழர்கள் மீது பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்படுமானால்—இந் நாட்டில் அரசு என்று ஒன்றிருப்பது எதற்காக? இலங்கை தமிழர்களுக்கு பாதுகாப்பே கிடையாது என்ற உண்மையை 'டெயிலிநியூஸ்'சே உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறதா?

கருணாநிதி இங்கு வருவதால் மலையகத் தமிழர்கள் தாக்கப்படலாம் என்று பயமுறுத்துவதன் மூலம் அவரது வருகையை தடுத்து நிறுத்திவிட ஏரிக்கரை ஏடு முயற்சிக்கிறதென்றால்—இப் பயமுறுத்தலுக்கு கலைஞர் கருணாநிதியும், இந் நாட்டுத் தமிழ் மக்களும் கிஞ்சிற்றும் அஞ்சிவிட மாட்டார்கள் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

தமிழ் நாட்டின் முதல்வர் என்று கூட பாராது—கருணாநிதி மீது காறியுமிழ்ந்த ஏரிக்கரை ஏடுகளை தன் மானமுள்ள இந் நாட்டுத் தமிழினத்தார் இனிமேல் கையாலும் தொடுவதில்லை என்று சபதமேற்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம்தான் தமிழ் நாட்டை — தமிழ் [illegible] ரசிப்பவர்களை பழி வாங்க முடியும் என்று கூறிவைக்கவிரும்புகிறோம் —

---

## கருணாநிதி வருகையால்

# நாடற்ற மக்களுக்கு தொல்லைகள் விளையுமாம்!

'இது இந்தியக் கயிறு திரிப்பு அல்ல' என்ற தலைப்பின் கீழ் 30-11-69 இதழில் டெயிலி நியூஸ் தீட்டியுள்ள ஆசிரியத் தலையங்கம் வருமாறு:-

"பெரும்பாலும் கைவிடப் பட்டுவிட்ட தி. மு. க. தலைவரின் இலங்கை விஜயத்தை இங்கு யாரும் மணியடித்து வரவேற்கவில்லை. மாறாக யாரும் துக்கம் அனுட்டிக்கிறார்கள் என்றால் அது அரசியல் நேர்மை போட்டு உடைக்கப்பட்டு விட்டதற்காகத்தான்! அவரது நாட்டு அரசியலால் இலங்கையர்கள் எப்போதாவது தான் கவரப்படுகிறார்கள். ஆனால் அவரது திட்டங்கள் எங்கள் நாட்டு எல்லைக் கோட்டைத் தொடாதவரை அவரையும் அவரது மக்களையும் அவர்களது எண்ணப்படி நடக்க விட்டு விடுவோம்.

"கருணாநிதியிடமிருந்து அதைத் தான் இலங்கை எதிர்பார்க்கின்றது. அவர் இலங்கை அரசியலில் நுழைவதையோ, நுழைய முயற்சிப்பதையோ இலங்கையர்கள் பொறுக்க மாட்டார்கள். அவர் தமது அரைவேக்காட்டு அரசியல் கருத்துக்களை வெளியிடும்போது இந்த உண்மையை மறந்து விடக் கூடாது;

"இலங்கை ஜனநாயக நாடாக இருப்பதால்தான் நாடற்ற கள்ளர்கள் சிலர் தங்களை இலங்கை தி. மு. க. என்று அழைப்பதை நாம் இன்னும் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இலங்கை தனது இச்சுதந்திரத்தைப் பற்றியும் விரக்தி கொண்டிருக்கிறது. சுலபமாகக் கிடைக்கும் இறைச்சியைத் தேடி அலைந்து திரிந்த நரிபோல்-இலங்கை மண்ணை ஆக்கிரமிக்க எண்ணும் அண்மையிலுள்ள எந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கும் இலங்கை இடம் கொடுக்கமாட்டாது.

"இதுவரையில் இலங்கை தி. மு. க., கருணாநிதியின் கட்சியுடன் அரசியல் தொடர்பு எதுவும் கொள்ளாததையிட்டுப் பெரும்பாலான இலங்கையர் திருப்தியடைந்துள்ளனர். இதில் திரு. கருணாநிதியின் வார்த்தையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

"கருணாநிதியின் இந்த அறிவிப்பு, எதிர்காலத்திலும் இலங்கை அரசியலில் தலையிடுவதில்லை என்ற கொள்கையை உள்ளடக்கியதாயின் அவர் தனது நடவடிக்கைகளை மிகவும் பொறுப்புடன் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். தமிழ்மொழித் துறையில் கருணாநிதிக்குள்ள ஈடுபாடு பிரசித்தமான வஞ்சகத்திலிருந்து அவரை எவ்வகையிலும் காப்பாற்றி விடவில்லை. அவர் ஒன்றுக்கு மேற்பட்ட நாக்குகளால் பேசுகிறார்!

"தமது உத்தேச இலங்கை விஜயம் எதிர்வரும் பொதுத் தேர்தலைப் பாதிக்குமென்று இலங்கை அரசு கருதினால் அதைத் தாம் இரத்துச் செய்து விடுவதாக இன்று கூறுகிறார் கருணாநிதி. திரு. கருணாநிதியிடம் நுண்ணிய அறிவைவிட 'வழவழப்பான' தன்மையே காணப்படுகிறது. அவருக்கு இங்கு எந்தச் செல்வாக்கும் கிடையாது. அவர் இங்கு வருவதால் இருபெரும் சிங்களக் கட்சிகளில் எதுவும் பொதுத் தேர்தலில் வெல்லவோ, தோற்கவோ முடியாது. அவர் வரத் திட்டமிட்டுள்ள நேரம் தான் நாட்டில் பதட்ட நிலையை உருவாக்கிவிடும். அந்த நிலை உருவாகினால், அது பெரும்பாலும் நாடற்ற (மலையகத் தமிழ்) மக்கள் மீதும் ஏனைய இந்திய வம்சாவழியினர் மீதும் வன்முறைத் தாக்குதலில் கொண்டுபோய்விடும். தென்னிந்தியன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளக் கூடாது.

"முதலில் திரு. கருணாநிதி வேறு ஒருதொனியில் நாகஸ்வரம் வாசித்தார். தனது விஜயம் அரசியல் நெருக்கடி ஒன்றை ஏற்படுத்துமானால் தாம் வராமல் விடுவதும் அந்நிலையைத் தோற்றுவிக்கத்தானே செய்யும் என்று அவர் கேட்டிருந்தார். அப்போது அவரது கலாசார ஆர்வம் உறுதியாகக் காணப்பட்டது. இலங்கையில் தமது வருகைக்கு வரவேற்பில்லை என்று கூறப்பட்டதற்குத் தாம்கொடுத்த விளக்கம் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டு விட்டது என்றுஇப்போது திரு. கருணாநிதி கூறுகிறார்.

"தமது அரசியல் ஆசைகளைச் செய்தியாளர்களுக்கு வெளியிடுபவர் தி. மு. க. தலைவர் மட்டுமேயல்ல. திரு. கருணாநிதி தவறுதலாகத் தமது செய்தி வெளியிடப்பட்டதாகக் கருதியிருந்தால் அதற்கு எப்போதோ மறுப்பு தெரிவித்திருக்கலாம்.

"திரு. கருணாநிதியை இலங்கைக்கு அழைத்த கலாசார மன்றங்களை அடையாளம் காட்ட விரும்பாது யோகி மனப்பான்மையில் அவர் இருப்பது இலங்கை மக்களின் ஆவலைத் தூண்டுவதாக இருக்கிறது.

"திரு.கருணாநிதியின்முதல் பிரதிபலிப்புத் தனது கைகளில் வலிமையான தசைநாரைத் திரட்டிக் காட்ட விரும்பும் பெரிய அண்ணனின் செயலை ஒத்திருந்தது. இப்பொழுது அவர் திறந்த உள்ளம் கொண்டவர்போல காட்சியளிக்க ஆசைப்படுகிறார். மெல்லிய கண்ணறை வேட்டியைக் கொண்டு தனது நிர்வாணத்தை மறைக்க முயலும் ஒருவனின் எண்ணத்தையே நமக்கு அவர் ஏற்படுத்துகிறார்!"

—இவ்வாறு அத்தலையங்கம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சித் தொகுதிக்கு கிடைத்துள்ள அடலேறு!

## அமரர் வன்னியசிங்கத்தின் அன்புச்சீடர் ஆலாலசுந்தரம்!

### எட்டப்பர்களுக்கு அவர் ஆலகால விஷம்! இயக்கத்தவர்களுக்கோ குளிர் தென்றல்!

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கி வருகின்ற கிளிநொச்சித் தொகுதிக்கு இம்முறை தமிழரசுக்கட்சியினர் வழக்கறிஞர் திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்களை நியமித்திருக்கின்றனர். கிளிநொச்சித் தேர்தல் தொகுதியில் மிகக்கூடுதலான வாக்குகளால் இவ்விளைஞர் வெற்றியீட்டுவார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. திரு. மு. ஆலாலசுந்தரம்அவர்களை இலங்கையில் வாழுகின்ற அரசியல் அறிந்த அனைவரும் தெரிந்திருப்பார்கள். தன்னுடைய இளமைப் பருவத்திலிருந்தே அரசியலில் ஈடுபட்டு உழைத்து வருகின்ற இவர் அமரர் வன்னியசிங்கத்தின் சீடர்களில் ஒருவர் என்றால் மிகையாகாது.

ஆரம்பத்திலே தனது கல்வியை யாழ்ப்பாணத்தில் முடித்துக் கொண்டு பட்டப் படிப்புக்காகச் சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து தனது பல்கலைக்கழகப் படிப்பை முடித்தார். பின்னர் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சேர்ந்து பயின்று வழக்குரைஞரானர். தமிழரசுக் கட்சியின் முழுநேர ஊழியனுகப் பணி புரிந்து வருகின்ற இவர் அரசியல் வாழ்வில் மட்டுமல்ல, பொதுச் சேவைகளிலும் பணி புரிந்து வருகின்றார்.

தமிழரசுக் கட்சியின் இரண்டாவது மாநாட்டில் அரங்கேற்றிய சங்கிலியன் நாடகம் மிகவும் பிரசித்தி பெற்றது என்பதை எல்லோரும் அறிவர். அவரே எழுதி அவரே இயக்குனராக நின்று இந்நாடகத்தை நடத்தி முடித்தார். 1965-ல் பரிசு பெற்ற கலையின் பரிசு என்ற நாடகம் திரு. மு. ஆலாலசுந்தரத்தால் எழுதி நடிக்கப் பெற்றது. இந்நாடகம் தமிழ் நாடகக் குழுவின் பரிசு பெற்றதாகும்.

அண்மையில் உடுவிலில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் மாநில மாநாட்டில் அரங்கேற்றிய தமிழர் கதை நாடகம் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியல் வாழ்வை அப்படியே பிரதிபலிக்கும் இந்நாடகம் தமிழரசுக் கட்சியினரின் தனிசிறந்த பிரசார நாடகமாகும்.

தமிழரசுக் கட்சியினர் தமது பணிகளை விரிவாக்கிய போது தொழிற் சங்கப் பணிகளை திரு. ஆலாலசுந்தரமே ஏற்று நடத்தினர் என்பதை சகலரும் அறிவர். இன்று இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தின் பொதுச் செயலாளராகப் பணிபுரிந்து வருகின்றார் வடகிழக்கு மாகாணத்தில் மிகப் பெரிய தொழிற்சங்கம் அதிகமான அங்கத்தவர்களைக் கொண்டதாகும். இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியின் இணைச் செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார்.



இவர் செயலாளராய்ப் பணிபுரிந்தவேளையில் வாலிப முன்னணியினர் பலபோராட்டங்களையும் நடத்தியுள்ளனர் என்பதை இளைஞர்கள் பலர் அறிவர்! தமிழரசுக் கட்சியின் கல்முனை மாநாட்டில் உதவிச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட நாள் முதல் இன்று வரை உதவிச் செயலாளரகவும் இருந்து வருகின்றார்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் பிரசாரப் பீரங்கியாக இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணம் முழுவதும் பிரசாரம் செய்தார். வடக்கு மாகாணத்தில் நடைபெற்ற கேள்வி பதில் கூட்டங்கள் தமிழரசுக் கட்சியின் சாதனைகளில் வியக்கத்தக்கதாகும். இதன் மூலமே இலங்கையில் தமிழ் பேசும் பகுதிகள் பலவற்றிற்கும் அறிமுகமாகும் வாய்ப்பு இருவருக்குக் கிடைத்தது.

திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகின்ற சகல கூட்டங்களுக்கும் மக்கள்திரள ஆரம்பித்தனர். 1969நடைபெற்ற மாநில மாநாட்டில் அம்மாநாடு திறம்பட நடை பெறுவதற்கு திரு. மு. ஆலாலசுந்தரம் இரவு பகலாக உழைத்தார், அவரது உழைப்பின் பலனை மிகச் சிறப்பாக அம்மாநாடு நடைபெற்றது சிறப்புக்குரியதாகும். தமிழர் கதை நாடகம் இவரது படைப்புக்களில் மிகச்சிறந்ததாகும்

சகல துறைகளிலும் கட்சிக்கு உழைத்துவருகின்றஇவ்விளைஞர் கிளிநொச்சித் தொகுதிக்கு வேட்பாளராக நியமனம்பெற்றது கிளிநொச்சித் தொகுதியைப் பொறுத்த வரையில் இளைஞர்கள் மத்தியில் மிக வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. கட்சியின் பல கிளைகள் அன்னவரை ஆதரித்து நிற்கின்றன. திரு மு. ஆலாலசுந்தரம் கிளிநொச்சித் தொகுதியில் தேர்தல் வேலைகளைக் கவனிக்கச் சென்ற இடமெல்லாம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்று வருகின்றார்.

இத்தனை தூரம் தொடர்ந்து உழைத்து வருகின்ற திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்கள் கிளிநொச்சித்தொகுதிக்கு வருவது கிளிநொச்சித்தொகுதி மக்களுக்குமகிழ்ச்சிதரும்விடயம்என்றேநாம் எண்ணலாம். அன்னவரை எமது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்து கிளிநொச்சித் தொகுதியை நாம் வளம் படுத்துவோம்.

வாழ்க தமிழ்
வளர்க தமிழரசு.

—மணியம்

## அண்ணா காவியம்



முத்து

### மருதம்

நெல்லழகு மணிகொஞ்சும் கழனி
நீதி மணி ஒன்றிலலாக் கழனி
நல்லுழவர் வியர் மணிபெய் கழனி
நாட்டாண்மை பொன்மணிகொள் கழனி
செல்வர் மணி ஆரமணி கழனி
சேரிமகள் கந்தலணி கழனி
அல்லல் விழி நீர்மணிசெய் கழனி
அறத்தனுக்குச் சாவுமணிக் கழனி

பண்ணையார் மாடிமனைக் கழனி
பஞ்சையர் மண்குடிசைக் கழனி
பொலைஅணையில் சிலர் தூங்கும் கழனி
பூனை பலர் அடுப்புறங்கும கழனி
வெண்ணிலவில் தோய்பணக்கர் கழனி
வெய்யிலிலே காய் வறியர் கழனி
தன்னலத்தர் குடியிருக்கும் கழனி
தமிழ் உழவர் துடிதுடிக்கும் கழனி

அமிழ்தமெனும் நெல்விளையும் கழனி
ஆனாலும பசியிருக்கும் கழனி
இமையுறங்காத் தொழிலாளர் கழனி
இனி துறங்கும் பணக்காரர் கழனி
அமைதியிலா வாழ்வுடையார் கழனி
அழுகை அறு வடைசெய்யும் கழனி
தமிழர் தமிழரை அடக்கும் கழனி
தமிழர்க்கே இழிவு தரும் கழனி

நிலங் கிழித்துப் பண்படுத்தும் கழனி
நீசர்மனம் பண்படுத்தாக் கழனி
குலம்பிரித்துப் புணைபடுத்தும் கழனி
கொடியர்தலைமப் புணபடுத்தாக் கழனி
எலும்பருடல் துயருத்தாக் கழனி
எத்தருடல் அன்புறுத்தும் கழனி
வளம்பெருக்கிப் பொன்குவிக்கும் கழனி
மனித வளம் சிறிதுமில்லாக் கழனி

செங்கதிரோன் சிரித்திருக்கும் கழனி
சேரிமக்கள் அழுதிருக்கும் கழனி
தங்கமணிப் புருகொழுத்த கழனி
தமிழ் உழவர் உடல்மெலிந்த கழனி
பொங்கு நதி விளையாடும் கழனி
புனத்து மகள் சோர்ந்திருக்கும் கழனி
செங்கரும்பு தித்திக்கும் கழனி
தினம் கசக்கும் வாழ்வுடையார் கழனி

காசுடையார்க்குப் பணியும் கழனி
கயமைகொடி போட்டாளும் கழனி
நீசரை எதிர்த்தறியாக் கழனி
நெஞ்சழுகிப் புழுநெளியும் கழனி
தாசியர் தம் மனையிருக்கும் கழனி
தமிழ்ப்பண்பு துகள்படுமோர் கழனி
நாசமுற்ற தமிழினத்தார் கழனி
நாற்றமுறு சேறுநிறை கழனி

நெற்கதிர்கள் தலைகுனியும் கழனி
நீசர்தலை நிமிர்ந்திருக்கும் கழனி
புற்களைகள் எடுத்தெறியும் கழனி
புல்லர்களை எடுத்தெறியாக் கழனி
கற்களுக்குப் பால்பொழியும் கழனி
காய் வயிற்றுக் குணவுதவாக் கழனி
பொற்கதி ரோனைப் புகழாக் கழனி
பொங்கல் விழா வைமறந்த கழனி

கழனி இது நல்லுழவர் கழனி
கைதேய ஏர்நடக்கும் கழனி
கழனி இது பஞ்சையர்தம் கழனி
கண்ணீரில் நெலவளரும் கழனி
கழனி இது தொழிலாளர் கழனி
கனல் மூச்சில் பொலிதூற்றும் கழனி
கழனி இது செந்தமிழர் கழனி
கழனியென்ற சொல்லுக்கே புறணி!

காசி ஆனந்தன்

### வீதிக்கு வன்னியசிங்கம் பெயர்

வாசரவத்தையில் உள்ள ஒரு வீதிக்கு வன்னியசிங்கத்தின் பெயர் சூட்டப்பட்டது. அமரர் வன்னியசிங்கத்தின் ஞாபகார்த்தமாக அவரது பெயரை மேற்படி வீதிக்குச் சூட்டுவதெனபுத்தூர் கிராம சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் விடுதலையா? பொ...

# முதலில் அடையவேண்டி...

## வாசகர்களே!

தமிழ், தமிழ்என்றுபேசினால் பெரும்பான்மை இனத்தின் பகைமையைச் சம்பாதிக்க வேண்டிவரும் என்று கூறியிருக்கிறார் தமிழின் பெயரால் தமிழர்களுக்காக கட்சி நடத்தும் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்!

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் இக் கருத்தினைப்பற்றி தமிழ் மக்களே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? பெரும்பான்மையினர் கோபத்துக்குப் பயந்து தமிழை இழக்கத் தயாராக இருக்கிறீர்களா?

உங்கள் கருத்துக்களை உடன் சுதந்திரனுக்கு சிறு கட்டுரை வடிவில் எழுதி அனுப்புங்கள்!

—ஆசிரியர்

அன்புள்ள நண்பா,

கிளியின் கதையொன்று சொல்கிறேன். கேட்கிறாயா? அழகான கிளியொன்று; பச்சைப்பசேலென்ற நிறம். கிச்சுக் குரலெடுத்து அது பேசும் அழகே தனிச் சுவையைக் கொடுத்திடும். அந்தக் கிளிக்கு கொத்திக் கொத்தி உண்பதற்கு நேரம் தவறாமல் தித்திக்கும் பழம் தந்திடவும், பணிவிடை செய்திடவும், அழகான பாவையொருத்தி! கிளியுடன் கொஞ்சி விளையாடவும், 'பெற்றம்மா' என்று பேச்சுச் சொல்லிக் கொடுத்திடவும் அந்தக் 'கிளிமொழியாள்' தவறுவதில்லை!

எல்லாம் இருந்தும் என்ன? அந்தக் கிளியின் முகத்திலோ ஈயாடவில்லை. ஒரே ஏக்கம். விரக்தி. அதன் கூடப் பிறந்த மற்றோர் கிளி சுதந்திரமாகப் பறந்து திரிந்து 'தென்னங் கீற்றுப் பொன்னூசல்' ஆடும் போதெல்லாம் தானும் அதனுடன் போய்ச் சேர்ந்து விடவேண்டும் என்று இந்தக் கிளி துடித்திடும்! அக்கா, அக்கா என்று அழைத்திடும்! ஆனால் 'அக்கா' இதற்கு என்ன செய்திட முடியும்? இது இருப்பதோ 'அழகான' கூண்டுக்குள்!

அழகான கூடு, வேளாவேளைக்கு தங்கத்தட்டில் கனிவகைகள்! மதுரப்பருப்புக்கள்! அதை வழங்கிடவும் அரட்டை அடித்திடவும், மடியில் வைத்துக் கொஞ்சிடவும் மங்கை நல்லாள் வேறு. இத்தனை இருந்தும் கிளியின் உள்ளத்தில் மகிழ்ச்சியில்லை; திருப்தி இல்லை; கூண்டை உடைத்து வெளியேறி சுதந்திரமாக வான வீதியில் பறந்து திரிந்து வாழ வேண்டுமென்றே அது துடிக்கிறது.

அடிமையாக கூண்டுக்குள் இருந்து கொண்டே தங்கத்தட்டில் கனிவகைகளை நேரம் தவறாமல் உண்பதைவிட, சுயேச்சையாகப் பறந்து திரிந்து கிடைப்பதை உண்டு குதூகலமாக வாழவே அது விரும்புகிறது. இதற்குப் பெயர்தான் சுதந்திர உணர்ச்சி!

கிளி மூலம் இந்த உண்மையை நண்பா, நம்முடைய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தமிழர்களுக்கு எவ்வளவு உறைப்பாகக் கூறுகிறார் பாரேன்!

தித்திக்கும் பழம் தின்னக் கொடுப்பர்
மதுரப் பருப்பு வழங்குவார் உனக்கு
பொன்னே மணியே என்றுனைப்
புகழ்வார்
ஆயினும் பச்சைக்கிளியே அதோபார்!
உன்னுடன் பிறந்த சின்ன அக்கா
வானவீதியில் வந்து பறந்து
தென்னங் கீற்றுப் பொன்னூசல்
ஆடியும்
சோலை யாயினும் காடுகள் மேய்ந்தும்
வானும் மற்றும் தன்வசத்தில்
கொண்டாள்
தச்சன் கூடுதான் உனக்கு சதமோ
அக்கா, அக்கா என்று நீ அழைத்தால்
அக்கா தர என்ன
சுக்கா, மிளகா சுதந்திரம் கிளியே!

ஆமாம் நண்பா, சுதந்திரம் என்பது கடையில் வாங்கிடும் சுக்கும் மிளகுமல்ல; எலும்புகளை முறித்துக் கொடுத்து பச்சை இரத்தத்தை கொட்டி, கண்ணீர் ஆற்றுக்குள் நீந்தியே பெறப்படவேண்டிய உடைமை: சோம்பேறிகளும், தியாகம் செய்யப் பின் வாங்குபவர்களும் சுதந்திரத்தின் நிழலைக் கூட மிதிக்க அருகதையற்றவர்கள்!

நண்பா, தமிழினத்தின் இன விடுதலைக் கோரிக்கையை கைவிட்டு விட்டால் — சமஷ்டி இலட்சியத்தை குழிதோண்டிப் புதைத்துவிட்டால்—சலுகை பல பெறலாம் சிங்களவரிடமிருந்து என்று தமிழ் காங்கிரசினர் கூறிடுவதைக் கேட்கும் போதெல்லாம் புரட்சிக் கவிஞர் கூறிய மேற்கண்ட கிளியின் கதைதான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

கேவலம், பறவையினத்தைச் சேர்ந்த கிளியே அடிமைத்தனத்தை ஏற்க மறுக்கும்போது மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் — அதுவும் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த தமிழ்க் குடிமக்களா அடிமைத்தனத்தை ஏற்பார்கள்?

நண்பா, இன விடுதலையைவிட பொருளாதார சலுகைகளே இன்று தமிழர்களுக்கு வேண்டும்; தமிழ் தமிழ் என்று பேசுவதால், பெரும்பான்மையினத்துக்கு ஆத்திரம் வந்து விடும்; என்றெல்லாம் கூறி தமிழர்கள் மத்தியில் அடிமை மனோபாவத்தினை வளர்த்துவிடப் பாடுபடுகிறது தமிழ் காங்கிரசு! தமிழினத்தின் விடுதலை வேட்கையை கிள்ளியெறிந்துவிட பார்க்கிறார் தனிப்பெருந் தலைவர்!

அவர்கள் அப்படித்தானே செய்யப் பார்ப்பார்கள்; சிங்கள ஏகாதிபத்தியத்தின் கையாட்களாச்சே காங்கிரசார்; முள்ளை முள்ளால் எடுப்பதுபோல தமிழினத்தின் உரிமைக் கோரிக்கைகளை தமிழர்களின் ஒரு பகுதியினரைக்கொண்டே மட்டந்தட்ட சிங்கள ஏகாதிபத்தியம் முயலுவது ஒன்றும் ஆச்சரியமல்லவே: என்று கூறுவாய் நண்பா!

தமிழ் காங்கிரசின் சூழ்ச்சித் திட்டங்கள் எல்லாம் உனக்குத் தெரியுமென்றாலும், அவற்றை நாட்டு மக்களுக்கு விளக்கமாக எடுத்து கூ...
ரின் கடமைய...

நண்பா, ஒரு இ...
களுக்கும் அடிப்ப...
அந்த இனத்தின்...
கும். அரசியல் உரி...
இழந்து விட்ட இன...
யில் தள்ளப்பட்டு...
ளாதார விடுதலை...
தலையையோ ஒரு...
முடியாது. மீண்டும்...
அந்த இனம் நிலைநா...
பொருளாதார, சமூ...
காணமுடியும். இ...
உண்மை! அரசியல்...
முன்னர். பொருளா...
இனம் உலகில் எது...

தோழ... இ...
களுக்கு எ... இ...
நாட்டை உ...ாக்...
விடுதலைபெற... பி...
பொருளாத... த்து...
அவர்களால் வாழ...
அரசியல் விடுதலை...
பயாபரா மக்களும்,...

## அரசிய...

களும் இலட்சக்கண...
பலிகொடுத்து...
போராடி வருகிறார்க...

300 ஆண்டுகள்...
யல் சுதந்திரத்திற்...
காலத்தில், அங்கு...
சுதந்திரம் வேண்ட...
சலுகைகளை யாசித்...
கிலேயரிடமிருந்து;...
கக் கூடக் கூறியது...
களே, நீங்கள் ஐ...
தொடர்ந்து வாழவே...
மொழியை அழி...
என்று முழங்கினன்...
ரான டி வேலரா;...

ஆனால் இங்கு...
த்மிழர்கள் மத்தியி...
கிரசு என்றோர் ஐ...
குரலெழுப்புகிறது—...
டாம்; தமிழ் தமிழ்...
பயனில்லை; பெரும்...
யாசித்து உத்தியோ...
ளாதார சலுகைகள்...
அதுவும் மானம்...
கொண்டு வாழும்...
மத்தியில் ...மை...
வாக இப்படி ஒரு...

நண்பா, ஈழத்...
களே ஆண்ட கா...
கம் எத்துணைவள...
நாடாகத் திகழ்திரு...
ளர்! கடல் வாணி...
ளூர்க் கடலில் மூழ்...
களையும் பவளங்களை...
நிரை நிரையாகக்...
யவனர்கள்! செந்...
பும் வேண்டிய மட்...
பாடும் தேனகத்தில்...
மூட்டை மூட்டை...
ஏற்றுமதியான...
துறைமுகத்திலிருந்...
மூகத்தும் தன்புக...
கொடியோனை இ...
ருந்து சங்கிலி மன்ன...
தமிழகம் தலைநிமிர்...
ளாதாரத்துறையில்...
ழகம் யாருக்கும் அ...

ஆனால் இன்று...
சுதந்திரம் வந்து 2...
விட்டன! ஈழத் தமி...
கப்படுகின்ற வடக்கு...

# இன...

# க...

## ம.பொ. சி. வருகையைக் கண்டித்தவருக்கு தமிழ் நாட்டில் விருந்து ஒரு கேடா?

அண்மையில் டெல்லியில் நடந்த சர்வதேச பாராளுமன்ற மாநாட்டுக்கு சென்றிருந்த தமிழ் காங்கிரசின் உடுப்பிட்டி பா. உ. வும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரத்துக்குத் தமிழ்நாடு சட்டமன்றத் தலைவர் புலவர் கோவிந்தனும் தமிழ்நாடு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியனும் விருந்தளித்துக் கௌரவித்திருக்கின்றனர்.

விருந்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படமும் இந்நாட்டிலுள்ள சில தமிழ்த் தினசரிகளில் பிரசுரமாகியிருந்தன.

ஈழத்திலிருந்து தமது நாட்டுக்கு வருகை தந்த தமிழ் பா. உ. ஒருவரை—அதுவும் உபசபாநாயகர் பதவியில் இருப்பவரை—நாவலரும், புலவர் கோவிந்தனும் வரவேற்று உபசரித்துள்ளனர் என்றால் அது அவர்களது தமிழ்ப் பண்பாட்டுக்கு சிறந்த எடுத்துக் காட்டு என்பதில் துளியும் ஐயமில்லை!

ஆனால் திரு. சிவசிதம்பரத்திடம் அதே தமிழ்ப் பண்பாடு இருக்கிறதா? தமிழகத்தின் வரவேற்புக்கு அவர் தகுதி படைத்தவரா என்பதே நமதுகேள்வியாகும்!

கடந்த ஏப்ரலில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மாநாட்டின் இலக்கிய விழாவில் கலந்து கொள்வதற்குச் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அழைக்கப்பட்டதை பகிரங்கமாகக் கண்டித்து அறிக்கை விட்டவர் திரு. சிவசிதம்பரம்!

சிங்கள இனவெறியர்களுக்குப் பக்க வாத்தியம் வாசித்து, தென்னிந்தியத் தலைவரான ம. பொ. சி.யை எப்படித் தமிழரசுக்கட்சி அழைக்கலாம்; அப்படியே இவர்கள் அழைத்தாலும அவர் எப்படிக் கலந்து கொள்ளலாம் என்று துடுக்குத்தனமாகப் பேசி ம. பொ. சி.யின்உள்ளத்தைப் புண்படுத்தியவர் திரு. சிவசிதம்பரம்!

தமிழகத்துக்கும் ஈழத்துக்குமிடையே கலாசார பாலம் அமைக்க இங்கு வந்த ம. பொ. சி.யைத் தமிழின ஒற்றுமையைக் கூட மறந்து சொல்லம்புகொண்டு தாக்கியவர் திரு. சிவசிதம்பரம்!

மனம் நொந்து பின்வரும் அறிக்கையொன்றையே திரு. ம. பொ. சி. விட வேண்டிய நிலையை உருவாக்கியவர் திரு. சிவசிதம்பரம்!

''இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மாநாட்டிற்கு இந்தியத் தலைவராகிய என்னை அழைத்தது தமறென்று இலங்கைப் பாராளுமன்றத்தின் உபசபாநாயகர் திரு. சிவசிதம்பரம் அவர்கள் பேசிய பேச்சை இலங்கைப் பத்திரிகை ஒன்றில் பார்த்தேன். வியப்பும் வேதனையும் அடைந்தேன். பேசி இருந்தவர் தமிழர்; தமிழ் காங்கிரசைச் சேர்ந்தவர். அவரா இப்படிப் பேசுவது? தமிழர் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் கலாசார ரீதியில் ஒன்றுபட உரிமை பெற்றவர்கள்.

''இலங்கை தமிழரசுக்கட்சியார் தங்கள் இலக்கிய மாநாட்டுக்கு என்னை அழைத்தார்கள். நானும் இலக்கியத்துக்குப் புறம்பான அரசியல் எதையும் பேசவில்லை. அரசியல்கட்சியொன்று இலக்கிய மாநாடு நடத்துவதோ இலக்கிய ரீதியில் அயல்நாட்டுத் தமிழரைக் கௌரவிப்பதோ தேசபக்தியற்ற செயலாகிவிடாது. உயர் பதவியிலுள்ள சிவசிதம்பரமவர்கள் இதனைப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

கட்சிப்பூசல் காரணமாகத் தமிழர் இன ஒற்றுமையை அழித்துவிட்டால் அப்புறம் கட்சியும் அழிந்து விடும்.''

ம. பொ. சி. அறிக்கை—(31—5—69) சுதந்திரன்.

இதுமட்டுமா? எம். ஜி. ஆர். சிவாஜி நடித்த தமிழ்ப் படங்களை ஈழத்தில் தடை செய்ய வேண்டுமென்று இனவெறி பிடித்த சிங்களவர்கள் முழங்கிய நேரத்தில் தமிழரசுக்கட்சியினர் அதை வன்மையாக எதிர்த்ததைக் கேலி செய்தவர் திரு. சிவசிதம்பரம்!

இப்படிப்பட்டவருக்கு—சிங்களவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தமிழின ஒருமைப் பாட்டையே மறந்து பெருந்தன்மை இழந்து ம. பொ. சி. இங்கு வந்ததைக் கண்டித்தவருக்கு—தமிழகத்தில் வரவேற்பும் விருந்தும் ஒரு கேடா?

தமிழ் நாட்டவரே! ஈழத்திலுள்ள தமிழ் இனத் துரோகிகளைச் சரியாக அடையாளம் கண்டு கொள்ளுங்கள்! எதிர் காலத்திலாவது துரோகிகளுக்கு விருந்தும் வரவேற்பும் கொடுக்காதீர்கள்!

—கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார விடுதலையா?

## ...டியது எது?

...டுத்து ...கூறுவ... உன் போன்றோ
...மையா...ரோ!

...பா, ஒரு இனத்தின் சகல உரிமை
... அடிப்படையாக விளங்குவது
...னத்தின் அரசியல் விடுதலையா
...சியல் உரிமைகளை- விடுதலையை
...விட்ட இனம்- அடிமைப்படுகுழி
...ளப்பட்டு விட்ட இனம்- பொரு
... விடுதலையையோ, சமுதாய விடு
...யோ ஒரு போதும் பெற்றுவிட
... மீண்டும் அரசியல் விடுதலையை
...னம் நிலைநாட்டிய பின்னர் தான்,
...ாதார, சமுதாய விடுதலையையும்
...டியும். இதுதான் வரலாற்று
...! அரசியல் விடுதலையைக் காணு
... பொருளாதார விடுதலை பெற்ற
...லகில் எதுவுமே இல்லை!

...ழ... இல... ...யூதர்கள் தங்
... எ... இஸ்... என்றோர்
... உ... ...ாக்கி ... ...மில் அரசியல்
...பெற... பின்ன... ...தான் இன்று
...ாத... ...த்துறையி... தலைநிமிர்ந்து
...ால் வாழமுடிகிறது! இதேபோல
... விடுதலைக்காகத்தான் இன்று
...ா மக்களும், தென் வியட்நாம் மக்

### ...ரசியல் மடல்

...இல்ட்சக்கணக்கான உயிர்களைப்
...காடுத்து பல்லாண்டுகளாகப
...டி வருகிறார்கள்!

... ஆண்டுகள் ஐரிஷ் மக்கள் அரசி
...தந்திரதத்திற்காகப் போராடிய
...ில், அங்கு யாரும் அரசியல்
...ம் வேண்டாம்! பொருளாதார
...களை யாசித்துப் பெறுவோம் ஆங்
...டமிருந்து; என்று விளையாட்டா
...க் கூறியது கிடையாது, ஐரிஷ் மக்
... நீங்கள் ஐரிஷ் மக்களாகத்
...ந்து வாழவேண்டுமென்றால் ஐரிஷ்
...யை அழிந்துபோகவிடாதீர்கள்
...முழங்கினன் ஐரிஷ் விடுதலை வீர
... வேலரா;

...ல் இங்குதான் — இந்நாட்டுத்
...ள் மத்தியில்தான் தமிழ் காங்
...ன்றோர் ஐந்தாம் படைக் கட்சி
...ப்புகிறது—இன விடுதலை வேண்
...மிழ் தமிழ் என்று பேசுவதால்
...ல; பெரும்பான்மையினத்திடம்
... உத்தியோக சலுகைகள், பொரு
... சலுகைகள் பெறுவோம் என்று!
... மானம் ஒன்றே பெரிதெனக்
... வாழும் மறக்குடித் தமிழர்
... ...மைத்த... ...துக்கு ஆதர
...ப்படி ...ஒரு ஈன... குரல்!

...பா, ஈழத் தமிழகத்தை தமிழர்
...ண்ட காலத்தில்—ஈழத் தமிழ
...துறைவளம் கொழிக்கும் திரு
... திகழ்திருந்தது; கப்பல் கட்டி
...ல் வாணியம் புரிந்தனர்! மன்
...டலில் மூழ்கியெடுத்த முத்துக்
... பவளங்களையும் வாங்குவதற்கு
...ிரையாகக் காத்துக்கிடந்தனர்
...ள்! செந்நெல்லும், செங்கரும்
...ண்டிய மட்டும் விளைந்தன! மீன்
... தனகத்தில் விளைந்த மணியரிசி
... மூட்டையாக தமிழகத்துக்கு
... தியானது திருகோணமலைத்
...த்திலிருந்து! ஐயிரண்டு திசை
... தன்புகழைவைத்த வீணைக்
...ாளை இராவணன் காலத்திலி
...கிலி மன்னன் காலம்வரை ஈழத்
... தலைநிமிர்ந்து நின்றது பொரு
... துறையில்—காரணம் ஈழத் தமி
...ருக்...ம் அடிமை...படாததால்!!

...ல் இன்றுள்ள நிலை என்ன?
... வந்து 21 ஆண்டுகள் முடிந்து
... ஈழத் தமிழகம் என்று அழைக்
...ற வடக்கு, கிழக்கு மாகாணங்

கள் பொருளாதாரத்துறையில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் அடைந்துள்ளதா? தெற்கு முன்னேறியுள்ள அளவுக்கு, வடக்கு, கிழக்கு வாழுகிறதா? கிடையாது!

வடக்கும், கிழக்கும் பொருளாதாரத் துறையில் வளர்ச்சி பெற்றிருந்தால்—தமிழர்கள் வேலை தேடி—தொழில் தேடி தென்னிலங்கைக்கு கையேந்தி வரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்குமா?

காங்கேசன் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்று பல்லாண்டுகளாக மூச்சுவிடாமல் முழங்கிவந்ததன் பயனாக இப்போதுதான் அடிக்கல் மட்டும் நாட்டப்பட்டிருக்கிறது — அடிக்கலுடன் விஷயமே நின்றுவிடுகிறதோ யார் கண்டார்கள் நண்பா, வானொலி நிலையத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டதுபோல!

யாழ்ப்பாணத்தின் கற்பகவிருட்சம் பனை; பனம்பொருட்களை மூலப்பொருளாகக் கொண்டு எத்தனையோ பொருட்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திட முடியும்; பன்னூறு பேருக்கு வேலைகொடுத்திட முடியும்; எனவே பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்று திறந்திடுக என நமது பருத்தித்துறை பா. உ. துரைரத்தினம் எத்தனை ஆண்டுகளாக கோரி வருகிறார்? நடைபெற்றதா நண்பா!

கண்ணாடித் தொழிற்சாலை நிறுவ கனிவளம் மெத்த உண்டு வல்லிபுரக் கோவிலில் — ஆங்கோர் கண்ணாடித் தொழிற்சாலை நிறுவிடுக என நம்மவர் எத்துணை காலமாக கேட்டு வருகிறார்கள்—ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

கல்குடாத் துறைமுகத்தை திறக்க ஏற்பாடு செய்கவென நமது சொல்லின் செல்வர் இராசதுரை அண்மையில் கூட பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தாரே—அங்கீகரிக்கப்பட்டதா?

இப்படி எத்தனை எத்தனை திட்டங்களை எடுத்துக்கூறிடினும் அதனை ஏற்று செயல்படுத்த ஆட்சி தமிழர்கள் கையிலா இருக்கிறது?

நண்பா, வடக்கு, கிழக்கு மாகாணங்களை பொருளாதாரத்துறையில் அபிவிருத்தி செய்வதைவிட அவற்றை சிங்கள மயமாக்கும் சூழ்ச்சித் திட்டத்துடன் குடியேற்றத் திட்டங்கள் வகுக்கப்பட்டன—சிங்கள ஆட்சியாளரால்! சிங்களவர்கள் பெருமளவில் குடியேற்றப்பட்டனர்—தமிழ்ப்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டது—தமிழ் காங்கிரசின் ஒத்துழைப்புடன்!

பனைவளம்,
கனிவளம்,
காட்டுவளம்,
கடல்வளம்,
நிலவளம்,
துறைமுகவளம்,
அறிவுவளம்,
ஆற்றல்வளம்,

இப்படி எத்தனையோ வளங்களிருந்தும் தமிழ்ப்பகுதிகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன தொடர்ந்து சிங்கள ஆட்சியாளரால்! இந்நிலை ஏற்பட்டது ஏன்?

தமிழ்ப் பகுதியை ஆளும் அதிகாரத்தை இன்றைய ஒற்றையாட்சி அரசியலமைப்பு சிங்களவர்களிடம் மட்டுமே கையளித்துள்ளதால் ஏற்பட்டிருக்கும் நிலைதான் இது! இதே ஒற்றையாட்சி அரசியலமைப்புத்தான் நீடித்து இருக்க வேண்டும்; என்றென்றும் சிங்களவர்களே ஆளுபவர்களாகவும், தமிழ் மக்கள் ஆளப்படுபவர்களாகவும் இருக்க வேண்டும்; இப்படி தமிழ் காங்கிரசு கூறுகிறது!

தமிழ் மக்கள், சிங்கள மக்களை தமது எசமானர்களாக ஏற்றுக் கொண்டு, இன

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழா, நீ எந்தப் பக்கம்?

தமிழ் தமிழர்களின் உயிர். தமிழின்றேல் தமிழினமில்லை; தமிழ் நாடு இல்லை; தமிழ்க் கலை இல்லை; தமிழ் பண்பாடுமில்லை.

தமிழ்மொழியை, கருத்துக்களை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக மட்டும் தமிழர்கள் கருதவில்லை; தாய் மொழியாம் தமிழைத் தங்களுக்கு வழிகாட்டும் தெய்வமாகவும் கருதுகிறார்கள். இப்படி வேறு எந்த மொழிக்காரரும் தமது மொழிக்கு மதிப்புக் கொடுத்ததில்லை!

இதனால் தான் தமிழ் மொழிக்கு ஆபத்து என்னும்போது தமிழர்களின் நாடி நரம்புகள் எல்லாம் துடிக்கின்றன; தமிழுக்காக இன்னல்களை ஏற்கவும் எதையும் இழக்கவும் தயாராகி விடுகிறார்கள்.

தமிழை மறந்தவன்—தமிழைப் புறக்கணிப்பவன்—தமிழுக்கு ஆபத்து எனும் போதும் சூடு சுரணை வராதவன்—ஒரு தமிழனாக இருக்கவே முடியாது. அவன் வெறும் சோற்றுத்துருத்தி; சோற்றாலடித்த பிண்டம்!

தமிழ்மொழிக்குற்ற துயர் துடைக்கவென்றே தமிழ் நாட்டில் அமைந்திட்ட பாசறை தி. மு. க; ஈழத்தில் அமைந்திட்ட பாசறை தமிழரசுக் கட்சி!

தமிழுக்காக மயிர்க் கூச்செறியச் செய்யும் எண்ணற்ற தியாகங்களைத் தமிழ் நாட்டில் தி. மு. க. செய்தது என்றால், ஈழத்தில் தமிழரசுக் கட்சியே அத்தகைய தியாகங்களை தமிழுக்காக செய்திருக்கிறது; செய்து வருகிறது!

புகழ்பெற்ற சட்டமேதையான செல்வா அவர்கள் சட்டத்தை மீறி தமது முதுமையையும் பாராது பல மாதங்களாக வெஞ்சிறைக்குள் வாடினார் — காராக்கிருகத்தில் தவமிருந்தார் என்றால் யாருக்காக?

தமிழன்னைக்காக!

செல்வாவைப் பின்பற்றி-சட்டம் படித்த தமிழரசுக்கட்சியிலுள்ள புகழ்பெற்ற வழக்குரைஞர்கள் எல்லாம் சட்டத்தை தூசென மதித்து சிறைபுகுந்தனர் என்றால் யாருக்காக!

தமிழன்னைக்காக!

அமரர் வன்னியசிங்கம், வீ. ஏ. கந்தையா, இராசவரோதயம், ஏகாம்பரம் ஆகிய தலைவர்கள் தங்கள் உயிரையே அர்ப்பணித்தனர்—தமிழை வாழவைக்க!

காலிமுகப் போராட்டத்தின்போது காலிகளின் கல்லடியையும் ஏற்றுக்கொண்டு—நெற்றியிலிருந்து குபுகுபுவென்று பச்சை இரத்தம் வழிந்தோட பாராளுமன்றத்தில் நீதி கோரி அன்று முழக்கமிட்டார்—அதைத் தொடர்ந்து எண்ணற்ற இன்னல்களை இன உரிமைப்போராட்டத்தில் தாங்கிக் கொண்டார், தமிழரசுத்தளபதி அமிர்தலிங்கம்—தமிழுக்காக!

பால்மனம் மாறாத தனது பச்சைக் குழந்தைகளைப் பிரிந்து சிறைக்கொடுமையைத் தாங்கிக் கொண்டார் தளபதியின் தர்மபத்தினியான மங்கையர்க்கரசி—தங்கத் தமிழ் காக்க!

மூங்கில் தடியால் தாக்கப்பட்டு மூர்ச்சித்து விழுந்தபோதும் முத்தமிழ்வாழ்க வென்றே முழக்கமிட்டார்—இன்று தமிழுக்காக தாடி வளர்த்து வரும் சாவகச்சேரி நவரத்தினம்!

பொலீசாரின் குண்டாந்தடி எங்கள் இரும்பு மனிதன் நாகநாதனின் தலையில் பட்டு உடைந்ததே தவிர தமிழ் உணர்வுகொண்ட அவரது தலையை அதனால் எதுவும் செய்யமுடியவில்லை!

சிங்களக் காடையர்கள் உயிரைப் பலிகொள்ள வந்த போதும் உயிர் வெல்ல பல்ல; உயர் தமிழே எமக்குப் பெரிது என்று துணிச்சலுடன் எதிர்த்து நின்றவர் எங்கள் செந்தமிழ்ச் செல்வர் இராசதுரை!

தமிழுக்காக தூக்குமேடை ஏறவும் தயார் என முழக்கமிட்டவர் எங்கள் இதய மன்னன் வன்னியசிங்கம்!

தமிழுக்காக தமது உயிரையே தந்தார்கள் — திருமலைத் தியாகி நடராசன், தொழிலாளர் தோழர்கள் ஐயாவு, பிரான்சிஸ், மட்டு நகர் மாணவன் இராசேந்திரன் ஆகியோர்!

இப்படி தமிழுக்காக தமிழரசுக் கட்சியின் தலைவர்களும் தமிழரசுத் தொண்டர்களும் செய்துள்ள தியாகங்கள் ஏராளம்; ஏராளம்; இதை நாடு அறியும் நல்லவர்கள் அறிவார்கள்!

ஆனால், தமிழ் மொழியுரிமைப் போராட்டங்களின் போது ஒதுங்கியிருந்து ஐந்தாம் படை வேலைபார்த்த தமிழ் காங்கிரஸ் தலைவரோ — "தமிழ், தமிழ் என்று பேசினால் சிங்களவருக்கு கோபம் வரும்" என்று இன்று துரோக கீதம் இசைக்கிறார்! இதைக் கேட்டு, சீ இவரும் ஒரு தமிழனா! இப்படியும் ஒரு துரோகியா? என்று தமிழுள்ளங்கள் இன்று புழுங்குகின்றன!

சிங்களவருக்கு கோபம்வரும் என்பதற்காக தமிழை இழக்க தமிழ்காங்கிரஸ் தயாராகிவிட்டது!

தமிழே விழியெனப் போற்றும் தன்மானத் தமிழர் கூட்டமே! சிங்களவர்களுக்கு அஞ்சி சிங்காரத் தமிழை இழக்க நீ தயாரா?

தமிழ் மொழியை இழக்க—தாயை கொன்றுவிட தயாரென்றால் கண்ணை மூடிக் கொண்டு தமிழ் காங்கிரசின் பக்கம் சேருங்கள்!

இல்லை—சிங்களவர் என்ன? உலகே எதிர்த்தாலும் தமிழை வாழவைப்போம்—தமிழை இழக்க ஒருப்படோம் எந்த விலைகொடுத்தும் எங்கள் தமிழை காப்போம் என்று உறுதியுடன் குரல் கொடுப்பீர்களானால்—தமிழரசுக் கட்சியின் பக்கம் சேருங்கள்!

தன்மானத் தமிழா, நீ எந்தப்பக்கம்?

—கோவை.

## ...இன விடுதலைப் பாதையில் தடையின்றிச் செல்வோம்!

## காலம் கனியும்; அப்போது ...னி பறித்திடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களுக்கு,

அற்புதமான பழமொழிகள் தமிழில் உண்டு ('விழாத் தமிழர்' என்று சொல்வதைப்போல 'பழமொழித் தமிழ்' என்றே சொல்லலாம்.) 'பெரியோரைக் கனம்பண்' என்பதும் எமது பழமொழிகளில் ஒன்று.

அரசினரின் அனுசரணையுடன் பெரியோர்களால் 'முடுக்கப்படும்' இலக்கியப் பெருமன்றமே சாகித்திய மண்டலம். அது சமீபத்தில் ஒரு கவியரங்கத்தை நடாத்தியது. அதைப் பொதுமக்கள் கனம்பண்ணத் தயாராயில்லை என்பதும் உணர்த்தப்பட்டது.

நிகழ்ச்சிகள் மிகவும் தாமதித்தே தொடங்கப்பட்டாலும் காலையில் 15, 20 பேரும் பாலையில் ஒரு கொஞ்சப் பேரும் வந்தார்கள் ஏன் இந்நிலை? திருகுதாளங்களைப் புரிந்து கொண்டிருப்பதால் தானே?

பொதுமக்கள் கிடக்கட்டும் பல கவிஞர்கள் பங்குபற்றவேயில்லை; இது எதைக்காட்டுகிறது? சாகித்திய மண்டலம் இலக்கிய கர்த்தாக்களை கௌரவிப்பதையா அல்லது இலக்கிய கர்த்தாக்களுக்கு சா. மண்டலத்தைப் பற்றிய கௌரவத்தையா?

பல ஆண்டுகளுக்கு முந்திய மண்டலத்தாரின் விழாக்களையும் கூட்டத்தையும் எண்ணும்போது 'ஒழுக்கம் விழுப்பம் தரலான்.. ......?' என்றே சொல்லத்தோன்றுகிறது.

சாகித்திய மண்டலம் என்பது சில 'தலைவலி'களுக்கும் எழுத்தாளர்க்கும் மட்டும் சொந்தமானதல்ல. அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட பொதுமக்களின் சொத்து. எனவே பொதுமக்கள் தான் அதைத் திருத்துதல் வேண்டும். அவாகளே அதிற் களை பிடுங்குதலும் வேண்டும் எனவே விழாக்களைபகிஷ்கரிப்பது மட்டும் போதாது. இன்னமும் தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். நியாயத்தின் பாற்பட்டு கண்டனமேகூட தெரிவிக்கவேண்டும்.

மிகவும் பொறுப்புவாய்ந்த சாகித்திய மண்டலம் இதுவரை செய்த தவறுகள் பல 'சுயசரிதங்களும்,' 'நூல்'களும் எழுதப் போதுமானவை. ஆனால் இதையெல்லாம் யார் தட்டிக் கேட்டார்கள்? பொதுமக்களிடமிருந்து ஏன் கேள்விக்கணைகள் எழும்பவில்லை?

ஈழத்து வாசகர்களும், இலக்கிய பிரியர்களும் தங்களுடனாவது இவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டதுண்டா? இந்நாட்டிலுள்ள அறிவாளிகளும், நமது கல்வியாளர்களுமாவது இதையிட்டுச் சிந்தித்ததுண்டா?

ஏன் இல்லை?

எல்லாரும் இந்நாட்டின் குடிமக்கள்தானே? பேசச் சுதந்திரமுள்ளவர்கள் தானே? கேட்க உரிமையுள்ளவர்கள் தானே? வரி

## இலக்கிய உலகு

"வேதாளம்"

செலுத்துபவர்கள் தானே?

இவற்றிற்கெல்லாம் 'ஆம்' என்று பதில் சொல்லிக் கொண்டு வாளாவிருப்பது ஏன்? பொதுமக்களின் பணத்தால் சங்கம் இயங்குகிறது. பொதுமக்களின் பணமே பரிசுகளாக மாறுகிறது. ஆனால் அவர்களோ 'யாருக்கு வந்த விருந்தோ' என்று வாளாவிருப்பது சரியானதுதானா? தமிழின் பெயரால் தமிழரென கொண்டிங்கு வாழ்தல் நன்றோ சொல்லீர்.

தரமான—பரிசு அளிக்கப்படவல்ல — ஒரு நூல் எக்காரணம் கொண்டும் ஒதுக்கப்பட்டிருந்தால் அது நாட்டு மக்களையே ஏமாற்றுவதையும் — அவர்களுக்கு ஒரு உண்மை மறைக்கப்பட்டதையுமே குறிக்கும்.

இனியும் உங்களிடமிருந்து உண்மை மறைக்கப்படவேண்டாம். இப்போதிருந்தே விழித்துக் கொள்ளுங்கள்.

எனவே நீங்கள் செய்ய வேண்டியதென்ன?

ஈழத்து நூல்களை விலை கொடுத்து வாங்கிப் படியுங்கள். அப்போதுதான் என்னென்ன நூல்கள் வந்தன என்று உங்களுக்குத் தெரியும். அப்போதுதான் பித்தலாட்டங்களையும் அதற்கான மாற்று மருந்தையும் கூட கண்டுபிடிப்பீர்கள். இதுவே இலக்கியத்துக்கு உங்களது சேவையாகும்.

அதே 'விழா'வில் ஆபாசக் கவிதைக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பாராட்டுகிறேன்.

ஆனால் பார்த்திருக்கச் சுளை விழுங்கும் எமகாதக ஆபாசம் நடக்கிறதே அதற்கெல்லாம் கணைகள் தொடுக்கும் நாள் எந்நாளோ? அந்நாள் வந்துவிட்டால் அது ஈழ எழுத்தாளர்களின் பொன்நாள். வாசகர்களே அந்நாள் வரும் பேற்றை நீங்கள் தான் பெறவேண்டும்.

பொதுமக்களுடன் பேசுகின்ற இவ்வேளையில் மிக முக்கியமான ஒரு விஷயத்தையும் குறிப்பிடவேண்டியுளது.

அரசாங்கம், யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கென இவ்வாண்டு ஐந்து லட்சம் ரூபாவை ஒதுக்கியது ஆனல் பாடசாலை நலனுக்காக இரண்டு லட்சம் ரூபா மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. மிகுதி மூன்று லட்சமும் மீண்டும் அரசாங்கத்துக்கே திருப்பியளிக்கப்பட்டதாம்;

ஏன்?

யாழ் மாவட்டத்தில் புனருத்தாரணம் செய்யக்கூடிய பாடசாலைகளில்லையா! எல்லாப் பாடசாலைகளும் போதிய தேவைகளுடன்தான் இயங்குகின்றனவா? குறைவற்ற பாடசாலைகளா இல்லையா?

அல்லது பணத்தை மிச்சம் பிடித்துக்காட்டி நல்ல பெயர் சம்பாதிக்கப் பார்க்கின்றனரா?

ஐயகோ! தமிழினமே. என்றுதான் நீ 'படிக்கப் போகின்ருய்?

# தமிழியக்கம்

நமை வளர்ப்பான் நந்தமிழை வளர்ப்பவனும் தமிழ் அல்லால்
நம் முன்னேற்றம்
அமையாது சிறிதும் இதில் ஐயமில்லை ஐயமில்லை, அறிந்துகொண்டோம்!
தமிழ் எங்கே, தமிழின் நிலை என்ன எனத் தாமறியாத் தமிழர் என்பார்
தமிழர் நலம் காப்பவராய் அரசியலின் சார்பாக வர முயன்ருல்
இமைப்போதும் தாழ்க்காமல் எவ்வகையும் கிளர்ந்தெழுதல் வேண்டும்..."

என்று முழக்கமிட்டார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். ஆம், தமிழின்றேல் தமிழினமில்லை; தமிழ்நாடு இல்லை; தமிழ் பண்பாடு இல்லை; தமிழர்களின் உயிர்மூச்சாக விளங்குவது தமிழ். தமிழினத்தவர் மத்தியிலே தமிழ் உணர்ச்சி — எந்நாளும் மங்காது மடியாது பொங்கியபடியே இருந்திடவேண்டும்.

ஆனல் இந்நாட்டுத் தமிழ் மக்களிடையே 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்துடன் பொங்கி பிரவாகித்து எழுந்த தமிழ்த் தேசிய உணர்வும் — தமிழ்மொழி ஆர்வமும் இன்று மெல்லத்தணிவது போன்ற ஓர் மந்த நிலையை காணுகிறோம். இந்நிலை தொடர அனுமதித்தால் ஈழத்தில் தமிழினமே அழிந்துபோய் விடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்;

தமிழைக் காப்போம் என்று கூறி தமிழின்பெயரால் அரசியற்கட்சியொன்றையும் நடத்தி வரும தமிழ் காங்கிரஸ் தலைவர் தமிழ் தமிழ் என்றுபேசி பெரும்பான்மை சிங்களவர்களின் பகைமையை சம்பாதிக்கக்கூடாது என்று சூடு சுரணையின்றி உபதேசம் செய்யப் புறப்பட்டிருக்கிருர்; தமிழ் உணர்வை குழிதோண்டிப் புதைத்துவிடும் முயற்சியில் தமிழ்த் தலைவர் என்று கூறப்படும் ஒருவரே இறங்கியிருக்கிருர்; இப்படிப்பட்டவர்கள் தமிழ்த் தலைவர்களாக உலாவரலாமா? தன்மான உணர்வுபடைத்த தமிழ் இளைஞர்களே சிந்தியுங்கள்!

தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியின் தலைமையில் கண்ணீரும் செந்நீரும் சிந்தி நடத்திய போராட்டங்களாலும், செய்த தியாகத்தினலும், இன்று தமிழுக்கு ஓரளவு சட்டபூர்வமான உரிமைகள் கிடைத்துள்ளன. இன்னும் பெறவேண்டிய உரிமைக்கு போராடுமுன் பெற்ற உரிமைகளை காப்பாற்றவேண்டும். இந்த உரிமைகளை நடைமுறையில் நிலைநாட்டவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழ் மகனின் கையிலும்தான் பெரிதும் தங்கி உள்ளது.

'எல்லாம் தமிழிற் செய்தே நம் வாழ்வாம் தமிழை காப்போம்'— என்று அமரர் வன்னியசிங்கம் அன்று எழுப்பிய உரிமை முழக்கம் நாடெங்கும் ஒலிக்கவேண்டும். அரசாங்கத்துடன் சகல தொடர்புகளையும் தமிழிலேயே வைத்துக்கொள்ளவேண்டும். மொழியைவிட பொருளாதார சலுகைகளே தமிழர் இன்று வேண்டுவது என்ற கருத்தினை பொடிப்பொடியாக்கவேண்டும். தமிழை விட்டுவிட்டு, எமை நத்துவாய் என எதிரிகள் கோடியிட்டு அழைத்தாலும் தொடாதவர் தமிழர் எனும் நிலையை உணரவைக்க வேண்டும்!

ஆம், தமிழ் முழக்கம் நாலுதிசைகளிலிருந்தும் துரோகிகளின் காது செவிடுபடவெளம்பட்டும்!

தமிழுக்கு உரிமைகோரிக் குரலெழுப்புவோர்—தமிழ் புறக்கணிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் தங்கள் கண்டனக் குரல்களைச் சுதந்திரனுக்கு எழுதி ... வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்!

—கோவை

# சமஷ்டி, தமிழரசு, இரண்டும் இருவேறு கொள்கைகளா?

## ஜீ. ஜீ யின் விதண்டாவாதத்துக்கு 10 வயது சிறுவன் மனோகரன் பதில்!

ஆங்கே தமிழரசு என்றும் அதற்கே சமஷ்டியென்றும் கூறித் தமிழரசுக்கட்சி ஏமாற்றி வருவதாக தமிழ் காங்கிரஸ் தலைவர் அரசியல் விவேகமின்றி ஒருபொய்ப் பிரசாரத்தை மேற்கொண்டு வருகிருரல்லவா? திரு பொன்னம்பலத்தின் முடக்குவாதத்தை மீசாலையில் அண்மையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் கூட்டமொன்றில் பத்தே பதது வயது நிரம்பிய பால் மணம் மாருத சிறுவன் மனோகரன் என்பவன் பொடிப்பொடியாக்கி, ஜீ. ஜீ. யின் அரசியல் அறியாமைக்கு வெளிச்சம் போட்டுக் காட்டினுன். அச்சிறுவனது விளக்கத்தினை கீழே படியுங்கள்!

'சில நாட்களுக்கு முன்னர் எமது ஊரில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் திருவவளர் பொன்னம்பலம் பல கேள்விகளைக் கேட்டு, இவற்றைத் தமிழரசார் மறுக்க முடியுமா? என்றும் கேட்டார். அவர் கேட்ட கேள்விகளில் ஒன்று 'வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழரசு என்றும், அவற்றிற்கு வெளியே சமஷ்டி என்றும் சொல்லி தமிழ்ச் சாதியை இந்தத் தமிழரசுக்கட்சியினர் ஏமாற்றுகிருர்கள். இதை யாராலும் மறுக்க முடியுமா என்று பொது மக்களைப் பார்த்துக் கேட்டார். அதே கூட்டத்தில் அவருக்கு விடையளிக்க நாம் முயன்ருல் கூட்டம் குழப்பமாகிவிடும் என்ற காரணத்தால் பொலிசாரின் வேண்டுகோளுக்கு இணங்கி நாம் அங்கே மேடைக்குச் செல்லவில்லை; ஆனல அக்கேள்விக்கு இந்த மேடையிலிருந்து நான் பதிலளிக்க விரும்புகின்றேன்.

திருவாளர் பொன்னம்பலம் பெரிய அப்புக்காத்து தமிழ்க் காங்கிரசின் ஆயுட்காலத்தலைவர் அவருக்கு சிறுவனகிய நான் பதில் அளிப்பதால் அவரளவு தரத்தற்குச் சென்று விட்டேன் என்று நினையாதீர்கள். உண்மையில் அவர் என்னளவுக்கு வந்துவிட்டாரே என்றுதான் வருந்துகின்றேன்.

'நாங்கள் ஆறுமுக நாவலரை, நாவலர் என்றும் சுப்பிரமணிய பாரதியை, பாரதி என்றும் சொல்லி வருகின்ருேம் ஆனல் அவர்களுடைய தாயார் வைத்த பெயர் ஆறுமுகம், சுப்பிரமணியம் என்பதாகும். அவர்களது திறமையை, செயலை கருதி அவர்களை நாவலர் பாரதி என்ற பெயர் கொண்டு அழைப்பது பிழையா? என்று பொது மக்களை நீங்கள் கூறுங்கள்.

'எமது பொலிஸ் இன்ஸ்பெக்டர் அவர்களுக்குத் தாயார் வைத்த பெயர் துரைசிங்கம். ஆனல் அவர் படித்துத் தொழில் பார்ப்பதால் நாமெல்லோரும் அவரை இன்ஸ்பெக்டர்.' ஐயா என்று கூறுகின்ருேம். அவரது தாயார் எனது பிள்ளையை இன்ஸ்பெக்டர் என்று கூப்பிடாதீர்கள் நான் வைத்தபெயர் துரைசிங்கம் ஆனபடியால் அப்படித்தான் கூப்பிடவேண்டுமென்று கூறுவாரா?

அதேபோன்றுதான் இலங்கை தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் கட்சிக்கு வைக்கப்பட்ட பெயர் இலங்கைத் தமிழரசுக்கட்சி' ஆனல் அதன் சமஷ்டிக் கொள்கை காரண

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் விடுதலையா? ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை கோருவதை கைவிட்டு விட்டு பொருளாதார சலுகைகளை யாசிக்க வேண்டுமென்பது தமிழ் காங்கிரசின் வாதம்!

நண்பா, தமிழினம் தனது இன உரிமைகளைத் தாரை வார்த்து விட்டால்—தமிழ்ப் பகுதியில் சிங்கள ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு விட்டால்—ஒரு வேளை தமிழ் காங்கிரசு கூறிடுவது போல தமிழ்ப்பகுதிக்கு சில எலும்புத் துண்டுகள் கிடைத்திடக் கூடும்!

ஆனால் இத்தகைய இழி நிலையைத் தமிழினம் ஒரு போதுமே ஏற்றுக் கொள்ள மாட்டாதென்பது நிச்சயம்! உரிமைகளைக் கைவிட்டு பிச்சை இரக்கும் இழிந்த இனமாகப் போய்விடவில்லை தன்மானத் தமிழினம்!

நண்பா உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், தமது தமிழன் கனவு நூலிலே கூறிடுவது போல,

போர் நாள் வருமுன்னே... இடை
நாளில் தமிழ் மண்ணில்
கூர்வாளிலும் கொடியோர் சிலர்
குடி கொன்றிடப் பார்ப்பார்
சோர்வால் மனங்குலையா நிலை
கொண்டே செயல் புரிவீர்!
ஓர் நாள் வரும்... அந்நாள் தமிழ்
உய்யும் திரு நாளே!

பிச்சை உணவொன்றே பெரி
தென்பான் வயிறுடையான்
எச்சில் வரு மெனினும் தமிழ்
இனத்தை விலை வைப்பான்!
நச்சுமகன் குடிகேடன்
நன்றியிலாப்பாவி...
உச்சி பிளந்திடுவீர்! இவன்
ஒழிந்தால் விடிவுண்டே!

தினி முதலென்பான் வயி
றுடையான்! இவன் தோழன்
ஈனமகன் தன்னலத்தான்
இனத்தை மதிப்பானு?
தானுயர்வு பெறுவதெனில்
தாள் பிடித்து நிற்பான்
மானம் விலை வைப்பான்! இவன்
மனைவியையும் விற்பான்!

இழிவுடையான் தன்னலத்தான்
எதுவரினும் அஞ்சான்!
அழிவு தமிழினமடைய
அத்தனையும் செய்வான்!
மொழியினிலு மழகு தமிழ்
மொழி மறந்த கொடியன்
குழி நெருப்பில் இவனுடலம்
கொடுத்து வெறிகொள்வீர்

பூத்த மரம் போல் விளங்கும்
புதிய தமிழ்க் குலமே!
காத்திருந்து கனி பறிப்பீர்...
அதுவரைக்கும் இமைகள்
சாத்தி உறங்காதீர்! படை
வரிசை சரி பார்ப்பீர்!

..........................................................

ஆமாம், நண்பா, சலுகை கிடைக்கும் என்று மயக்கு மொழிபேசி, கடந்த 13 ஆண்டுகளாக தமிழரசுக்கட்சியின் தலைமையில் தமிழ் மக்கள் நடத்திவரும் இன விடுதலைப் போரை திசை திருப்பி அழித்து விட முயலும் தமிழ் காங்கிரஸ் துரோகிகளுக்கு ஈழத் தமிழக அரசியலில் இனியும் இடமளித்தல் ஆபத்து என்பதனை தமிழ் மக்கள் உணர்ந்திடச் செய்வாய்!

இன விடுதலையிலும் பார்க்க பொருளாதார அபிவிருத்தியே முக்கியமானது என்ருல், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிவேட்பாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் கூறியிருப்பது போல, பாராளு மன்றத்துக்கு தமிழ் காங்கிரசை தெரிந்தெடுத்து அனுப்புவதை விட ஐ. தே. கட்சியினரையோ, சுதந்திரக்கட்சியினரையோ அனுப்பலாமே!

தோழா, எத்தனை ஆண்டுகளானாலும், தமிழினத்தின் இன உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடி தமிழர்களுக்கென ஒரு சொந்த ஆட்சியை நிறுவியே தீருவோம்!

எத்தனை எட்டப்பர்கள் முட்டி மோதினுலும், இனத்துரோகிகள் ஆசை மொழி காட்டினுலும் ஆதிக்கக்காரர்கள் சீறிப் பாய்ந்தாலும் தமிழினம் தனது விடுதலைப் பாதையிலிருந்து மாற மாட்டாது என்பதை எதிர்வரும் பொதுத்தேர்தல் உலகுக்கு உறுதி செய்யும்!

முதலில் அரசியல் விடுதலை—அதன் பின்பே பொருளாதார சமுதாய விடுதலை—இதுவே நமது தெளிவான நிர்க்கமான முடிவாகும்!

கவிஞர் கூறிடுவதுபோல, காத்திருந்து கனி பறிப்போம், அதுவரைக்கும் இமைகள் சாத்தி உறங்கிடாது படை வரிசை சரிபார்த்திருப்போம்!

உன்,
அன்புத்தோழன்
கோவை மகேசன்

## கர்ப்பக் கிருகம்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நான் எதற்காக அம்மா கூறிய திருமணத்தை ஏற்றுக் கொண்டேனே அதே திருமணம் என்னையும் ஏமாற்றி, எதற்காக நான் வாழ்வைப் பலியிட்டேனே அதையும் கெடுத்துவிட்டது. விதிப்படி நடக்கும் என்பதை மறந்து நான் தியாகம் செய்தேன என் வாழ்வை. விதிவிட்டதா? என்னையே நான ஏமாற்றிக் கொண்டேன் பிரகாஷ்! என்னையா நான் ஏமாற்றினேன். இல்லை! இல்லை! என்னை நம்பிய உங்களையும் துன்பத்தில் பிடித்துத் தள்ளிவிட்டேன் என்னை மன்னித்துவிடுங்கள், அவள் வாய்விட்டேகுழறிஅழுதாள்.

அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டுக் கொண்டே பின்னால் வந்து நின்ற உருவத்தை புனிதம் பார்க்கவில்லை

மிகுதிக் கடிதத்தையும் படித்து முடித்து விட்டு நிமிர்ந்தவள் தனையே பார்த்துக்கொண்டு நிற்கும் உருவத்தைப் பார்த்ததும் துணுக்குற்று விட்டாள்.

'நீங்கள்......நீங்கள்.........' என்று தடுமாறிய புனிதத்தைப் பார்த்து மேலும் கீழுமாக தலையாட்டிய அவ்வுருவம் வெளியே சென்றது.

பித்துப் பிடித்தவள் போன்று எழுந்து ஓடினுள் புனிதம். (வளரும்)

## சமஷ்டி, தமி...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

மாகச் சமஷ்டிக்கட்சியென்று கூறுகின்றுர்கள் இது பிழையா என்பதை பொன்னம்பலம் அவர்களைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகின்ருேம்.' (பலத்த கைதட்டல்)

## நன்றிகொன்ற...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது ஐ. தே. க. தமிழர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லையென்ற ஓர் உண்மையை உணர்த்தியிருக்கிருர். இன்னும் சொலலப் போனுல் ஐ. தே. க. வில் நம்பிக்கையின்மையைத் தமிழர்கள் சார்பில் திரு. தேவநாயகமே கூறிவிட்டார். தமிழ்ப்பேசும் மக்கள் இதை ஊன்றிக் கவனித்து சிந்தனைக்கெடுத்துக்கொள்ளுதல் மிகவும் முக்கியம்.

ஆகவே தமிழ்ப்பேசும் மக்கள் தாங்கள் ஐக்கியமாக ஐ. தே. க. கட்சிக்கு தங்கள் எதிர்ப்பைக் காட்டவேண்டும். பதுளைமாநகரசபைத் தேர்தலில் தமிழர்கள் ஐ. தே. க. அபேட்சகராக போட்டியிட 'ரிக்கற்' கேட்டிருந்தும், அவர்களில் ஒருவருக்காவது 'ரிக்கட்' கொடுபடவில்லை. பேச்சளவில் மட்டும் திரு. பிரேமதாச கௌரவ டட்லி போன்ருேர் ஒற்றுமைக் கூக்குரலெழுப்புகிருர்கள்.

பதுளையில் தமிழர்கள் போட்டியிடுவதற்கு தகுதியற்றவர்களா? ''தமிழ்ப்பேசும் மக்களின் வாக்குத்தான் வேண்டும். ஆனுல் பிரதிநிதிகள் தேவையில்லை' என்று ஐ தே. க. நினைப்பது திருவாளர்கள் தேவநாயகம், உடுப்பிட்டி சிவா, வவுனியாச் சிவா, வாலறுந்த நரியென முன்னுள் அரை மந்திரி திரு. குமாரசுவாமியால் வர்ணிக்கப்பட்ட ஜீ. ஜீ. போன்றவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். எனும் புத்துண்டுகளை சுரண்டுபவர்களுக்குத் தெரியாமல் போவதில் விந்தையில்லை. [illegible] வது போல் பாசாங்கு செய்கிருர்கள். தமிழ்ப்பேசும் மக்கள் நித்திரைகொள்ள வில்லையென்பதை கட்டாயமாக கொழும்பு, பதுளை மாநகரசபைத் தமிழ்ப்பேசும் மக்கள் உணர்த்தி வைப்பார்களென தமிழ்ப்பேசும் மக்கள் சார்பில் திடமாக நம்புகிறேன்.

—முருகானந்தன்
எல்லாளன்,
சண்டிலிப்பாய்.

றம்ஸான் புனித நாளிலே சகலரும
இன்புற்றிருக்க இறைவனை
வேண்டுகின்ருேம்.

★

**43 வருட காலமாக இலங்கை மக்கள் அபிமானத்தைப் பெற்ற மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கப் பாவியுங்கள்.**

மில்க்வைற் நீல சோப்
மில்க்வைற் பார் சோப்
மில்க்வைற் சலவைப் பவுடர்.

மில்க்வைற் தயாரிப்பு மேலுறைகள் சேகரியுங்கள்.

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

யாழ்ப்பாணம்.

தந்தி: மில்க்வைற் தொலைபேசி: [illegible]

## செல்வநாயகபுரம் மாதர் கழகம்

அச்சுவேலி அரசினர் குடியிருப்புப் பகுதி மாதர்கள் மேற்படி வீட்டுத் திட்டப் பகுதியில் கூடி செல்வநாயகபுரம் மாதர் கழகம் என்னும் பெயரில் புதியதோர் கழகம் ஆரம்பித்துள்ளனர்.

அச்சுவேலிப் பகுதி குடியிருப்பு பாதுகாப்பு உத்தியோகஸ்தர் திரு. ஆ. வென்சஸ்சிலாஸ் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம், முன்னுள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் அவர்களின் பாரியார் திருமதி புனிதம் திருச்செல்வம் அவர்களையும், கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை அவர்களின் பாரியார் திருமதி பத்மா கதிரவேலுப்பிள்ளை ஆகியோர்களை காப்பாளர்களாகவும் திருமதி. க. தங்கமலரை தலைவராகவும். திருமதி. க. விக்னேஸ்வரியை காரியதரிசியாகவும் செல்வி ஆ. யோகராணியை தனாதிகாரியாகவும் ஏகமனதாய் தெரிவு செய்துள்ளது.

நிர்வாக சபை அங்கத்தவர்களாக செல்வி ச. புஸ்பராணி, செல்வி சி. சந்திரா, செல்வி கு. தயாநிதி, செல்வி செ. இரத்தினேஸ்வரி, செல்வி ச. சரஸ்வதி, செல்வி கி. யோகமலர், செல்வி க. லீலா, ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஜீ.ஜீ.யின் முக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்க்கால் அமைக்க தபால் நிலையம், தபால் பட்டுவாடா முதலான எந்தவசதியும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை. இவர்கள் அத்தொகுதி பா. உ. விற்கு முறையிட்டு செய்தும் பயனில்லை.

ஆனுல் அண்மையில் மல்லாவியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய தனிப்பெருந்தலைவர் அறுபது நாட்களில் தபால் சேவகரைத் தருவதாக குழ் உரைத்துள்ளார். அந்தோ பாவம், தனது கட்சியின் தொகுதி ஒன்றின் குறை தீர்க்க முடியாதவர் மல்லாவிப் பகுதி மக்களை ஏமாற்றலாம் என நம்பி ஏமாந்துவிட்டார்.

கிளிநொச்சித் தொகுதிப் பிரதிநிதி பண்டிதர் கா பொ. இரத்தினத்தின் முயற்சியால் இப்பகுதிக்கு ஓர் தபாற் சேவகர் விரைவில் நியமிக்கப்பட உள்ளார் என்பதை அறிந்த இவர் மக்களை ஏமாற்றப்போட்ட முகமூடி அப்பகுதி மக்களாலேயே கிழித்தெறியப்பட்டுவிட்டது.

## 275வது சுவீப் முடிவுகள்

இம்மாதம் 4ந்திகதி வியாழக்கிழமை இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 275 வது சுவீப் முடிவுகள் வருமாறு:—

முதல் பரிசு—
ரூபா 100,000
09 H 0684

2 வது பரிசு—
ரூபா 40,000
12 Y 0831

3 வது பரிசு—
ரூபா 10,000
44 T 0523

ஒவ்வொன்றும் ரூ: $657\frac{20}{100}$ சதம் 20 கொண்ட ஆறுதல் பரிசுகளும் வருமாறு:—

| | |
|---|---|
| 19 A 0485 | 02 P 0246 |
| 02 A 0142 | 18 P 0601 |
| 08 A 0513 | 35 Q 0020 |
| 42 A 0940 | 24 Q 0385 |
| 07 A 0121 | 13 Q 0924 |
| 22 B 0351 | 37 Q 0717 |
| 34 B 0027 | 43 Q 0649 |
| 35 B 0352 | 15 R 0439 |
| 40 B 0645 | 17 R 0215 |
| 19 B 0186 | 37 R 0391 |
| 15 B 0218 | 14 R 0983 |
| 35 C 0379 | 01 R 0120 |
| 04 C 0772 | 39 S 0756 |
| 23 C 0881 | 32 S 0104 |
| 10 D 0556 | 18 S 0258 |
| 02 D 0189 | 38 S 0363 |
| 39 D 0117 | 33 T 0134 |
| 15 E 0518 | 23 T 0634 |
| 09 E 0334 | 07 T 0591 |
| 09 E 0780 | 12 T 0250 |
| 31 E 0043 | 15 T 0777 |
| 23 F 0030 | 38 T 0842 |
| 19 G 0609 | 36 U 0716 |
| 33 G 0689 | 41 U 0689 |
| 26 G 0887 | 01 U 0790 |
| 17 H 0986 | 42 U 0116 |
| 16 H 0900 | 30 V 0350 |
| 24 H 0556 | 28 V 0190 |
| 19 H 0347 | 19 V 0575 |
| 27 J 0585 | 33 V 0590 |
| 05 J 0486 | 34 V 0541 |
| 36 J 0452 | 15 V 0947 |
| 31 K 0161 | 20 W 0582 |
| 42 L 0635 | 10 W 0130 |
| 40 L 0937 | 29 W 0809 |
| 41 L 0625 | 03 W 0768 |
| 29 L 0789 | 25 X 0284 |
| 40 L 0651 | 05 X 0465 |
| 27 L 0844 | 24 X 0304 |
| 04 M 0577 | 11 X 0346 |
| 41 N 0299 | 19 X 0921 |
| 31 N 0383 | 28 Y 0152 |
| 07 N 0926 | 09 Y 0502 |
| 24 N 0976 | 34 Y 0536 |
| 04 N 0116 | 32 Y 0261 |
| 21 N 0992 | 08 Y 0560 |
| 19 N 0234 | 14 Y 0731 |
| 26 O 0909 | 14 Y 0946 |
| 17 O 0247 | 16 Z 0320 |
| 23 P 0402 | 41 Z 0918 |

இவை தேசிய லொத்தர் சபையால் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.

'சுதந்திரன்' வாசகர்களே!

உங்கள் அபிமான எழுத்தாளர்,

" மருதூர்வாணன் "

எழுதிய,

**பெருநாள் பரிசு**

குட்டி நவீனம் — விலை — 1 ரூபா.
திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த நூல்.
தேவையானோர் எழுதவும்:
'தேன்மதி வெளியீடு'
" மருதூர் வாணன் " மருதமுனை 2 — (கல்முனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகொன்ற யூ என்.பிக்கு நல்ல பாடம்

நடக்கவிருக்கும் கொழும்பு பதுளை மாநகர சபைத் தேர்தல்களில் தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய விலைமதிக்க முடியாத வாக்குகளை மிகுந்த கவனத்துடனும் தீர்க்க தரிசனத்துடனும் உபயோகிக்க வேண்டுமென்று என்னைப்போல பல்வேறு தமிழ் பேசும் மக்களும் எண்ணுகிறார்கள்.

கொழும்பு மாநகரசபை கடந்த காலத்தில் தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சிகளை மதியாது நடந்ததென்றே கூறவேண்டும். உதாரணமாகக் கொட்டாஞ்சேனையில் முன்பு போட்டியிட்ட (ஐ. தே. க) திரு. ஹரிஸ் விக்கிரமதுங்க, இம்முறை சுயேச்சையாக ஓர் ஐ. தே. க. அபேட்சகரை எதிர்த்து நிற்கிறார். உதவி மேயராகக் கடமையாற்றிய திரு, ஹரிஸ் விக்கிரமதுங்க மாநகரசபையில் தமிழுக்குரிய இடம் கொடுக்கப்பட வேண்டுமென வாதாடியவர்.

### மக்கள் குரல்

ஆனால் பயன் எதிர்பார்த்தளவிற்கில்லை. வேறு பல காரணங்களாலும் இவர் ஐ. தே.க. நிர்வாகத்தில் வெறுப்படைந்து இன்று ஓர் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்.

இன்னுமோர் முக்கிய காரணமென்னவெனில் தமிழ் பேசும் மக்களுக்கு தொடர்ந்து பாகுபாடு காட்டி வரும் ஐ, தே. க. நிர்வாகத்தை விரட்டியடிக்கக் கொழும்புவாழ் தமிழ் பேசும் மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். தமிழ் பேசும் மக்கள் ஐ. தே. க. வில் தாங்கள் கொண்டுள்ள வெறுப்பைக் காட்டுவதற்கு கொழும்பு, பதுளை மாநகரசபைத் தேர்தல்கள் நல்லதோர் சந்தர்ப்பமளிக்கிறது.

தமிழ் பேசும் மக்களுக்கு இன்று பிரதிநிதித்துவம் வகிக்கும் இ. த. அரசுக்கட்சியினர் ஐ. தே. க. அரசாங்கத்துடன் சில நிபந்தனைகளின் பேரில் ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். மாவட்ட சபை நிறுவுதல், அரசாங்க ஊழியர் பிரச்சினை, தமிழ்ப் பல்கலைக் கழகம், குடியேற்றம் முதலியன முக்கியமானவைகள். ஆனால் இவைகளை இன்றைய அரசாங்கம் ஏற்று அதற்காகவேண்டிய நடவடிக்கைகளைச் செய்யவில்லை. இவைகளை த. அ. கட்சி தமிழ்ப்பேசும் மக்களுக்காகவே அரசினர் முன் வைத்து போதிய அவகாசம் கொடுத்தனர். ஆனால் ஐ. தே. க. பெருந்தன்மையற்று இக்கோரிக்கைகளை காலில் போட்டு மிதித்தது.

இச்சமயத்தில் அண்மையில் பதுளைத் தேர்தல் பிரசாரத்தில் கல்குடாத் தொகுதிப் பா.உ. திரு.கே. டபிள்யூ. தேவநாயகமவர்கள் என்ன பேசியிருக்கிறாரென்பதைக் கவனித்தால் மிகுந்த சுவாரஸ்யமாக இருக்கும். 'த. அ. க. தமிழர்களுக்கு கடந்த 4½ வருடங்களாக ஒன்றுமே செய்யவில்லை.'

(9ம் பக்கம் பார்க்க)

## புகட்டுவீர்!

### கொழும்பு, பதுளை தமிழ் பேசும் வாக்காளர்களுக்கு ஒரு வேண்டுகோள்!




ஓர் 14 அவு. யானை மார்க் ஒரேஞ் பார்லி போத்தல் உங்களுக்கு, நுரை பொங்கும் துல்லியமான 3 'கிளாஸ்', அதி தெம்பூட்டும் சுவை மிகுந்த, இன்றைய குளிர்பானச் சந்தையிலே எவராலும் பெறுதற்கரிய, அதி தூய்மையான உன்னத தர பானத்தை, இனிமையாக அளிக்கிறது. தாகத் தணிவுக்கு, அன்று முதல்—இன்று வரை—இல்லங்கள் அனைத்திலும் இப்பானம் அருந்தப்படுதற்குக் காரணம், இதுவே.

எலிபன்ட் ஹவுஸாரின்
ஓர் உயர்தர உற்பத்தி

# உங்களுக்கு சரியான சேவை

GRANT 631259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் — அண்ணு சொற்பயிற்சி மன்றப் பட்டி மன்றம்

# கணிகையராகப் பிறந்தும் கற்புநெறியை கட்டிக்காத்தவள் மாதவிப் பெண்ணுள்!

## எனவே கண்ணகியைவிட இவளே போற்றப்படவேண்டியவள்!

கண்ணகியே உயர்ந்தவள், சிறந்தவள் என செல்வி திலகமணி வாதமிட்டுப்போக, மாதவியே நெறியில் மிக்கவள் என்ற பக்கம் தலைமைதாங்கி செல்வி சற்குணதேவி நடராசா பேசத்தொடங்கினுர்; பேசினுரா? முழக்கமிட ஆரம்பித்தார்; கேளுங்கள்; கேளுங்கள்!

மதிப்புக்குரிய தலைவர் அவர்களே! சகோதர சகோதரிகளே என் அன்பு வணக்கம்! 'சிலப்பதிகாரத் தலைகளுள் சிறந்தவள் கற்பரசி கண்ணகியே! என்று அழகு நடையால் அணி செய்து மணியாக மொழிந்தார் எதிர்க் கட்சித் தலைவி என் கட்சித் தலைவி மாதவி சிறந்தவரல்ல என பல காரணங் கொண்டு வாதித்தார்.

முதலில் கண்ணகி யார்? மாதவி யார்? அவர்கள் வாழ்ந்த சூழல் எத்தகையது என நாம் பார்க்க வேண்டும்.

கண்ணகி—'ஒரு மாமணியால் உலகிற்கு ஓங்கிய திருமாமணி'! வண்மையாலும்—வாணிகத்தாலும் புகழ் பெற்று அரசு மதிக்கும் மாநாய்க்கன் என்னும் உயரிய வணிகனின் மகள். 'குலத்து மாதர்க்கு கற்பு இயல்பாம்' என்றபடி உயர் குலத்தில் பிறந்த கண்ணகி—தன்குலம் வழி வழியாகக் கற்றுத் தந்த பாடம் வழி ஒழுகிக் கற்பின் செல்வியாக வளர்த்து, தன் பெற்றேரால் நிச்சயிக்கப்பட்ட—அதே நகரில், அதே புகழொடு விளங்கிய மாசத்துவன் எனும் வணிகனின் மகன் கோவலனை மணந்தாள்.

மாதவி—மாயப் பொய்பல கூட்டும் மாயக்குலமாகிய கணிகையர் குலத்தில் பிறந்தவள். அடி அடியாக அரசனுக்கும் — ஆண்டு வந்த பரம்பரைக்கும் வரைவின் மகளிராய் விளங்கி வந்த கணிகையர் குலத்தில் பிறந்தவள். இவள் தன் குலத்து இயல்பின்படி. அறியாப் பருவம் ஐந்து வயதினிலேயே ஆடல் பாடல் அழகு முதலாம் அருங் கலைகள் யாவும். 'நிலத் தெய்வம் வியப்பெய்த நீள் நிலத்தோர் மனம் மகிழப் பயின்று அதை அரசன் முன் அரங்கேற்றினுள்.

அக்காலச் சூழ் நிலை தான் எத்தகையது? 'ஒருவன் ஒருத்திக்கு—ஒருத்தி ஒருவனுக்கு' என்று போற்றப்படும் பண்பு அருகி—அரசனும், பொருள் வளம் படைத்தோனும் கணிகையர் என அழைக்கப்படும் விலைமாதரை அடைந்து வாழ்ந்த காலம்.

தன் குல இயல்புவழி தான் கற்ற கலைகளை அரசன் முன் அரங்கேற்றிய மாதவிக்கு அரசன் பச்சை மாலையும் தலைப் பட்டமும் வழங்கினுன். 'வாங்கு நர் சாலும் தம் கொடிக்கு எனக் கூனி ஒருத்தியால்- அச்சமூக முறைப்படி விற்கப்பட்ட பச்சை மாலையையும், பட்டத்தையும் பொருள்கொடுத்துப்பெற்று அவளுடனேயே மாதவி மனை சென்ருன் கோவலன்.

கோவலன் பெருங் கலாரசிகன்! மாதவியின் கலையினுல் கவரப்பட்டே அம்மாலையை வாங்கி மாதவி மனை சென்ருன். ஆடல் பாடல் அழகுடன் இயற்கையாகவே தூய

### இலக்கியப் பூஞ்சோலை

அன்பும் மாதவியிடம் இருந்ததால்—தன் மனைவி மீது 'தீராக் காதல்' கொண்டிருந்த கோவலன் அதைச் சற்றே மறந்து மாதவி மீது 'விடுதல் அறியா விருப்பினனய்' வாழ்ந்து வந்தான். ஆனல் எதிர்க் கட்சியார் குறிப்பிட்டபடி வெறுமனே மாதவியின் ஆடலிலும் அழகிலும் மட்டும் அவன் மயங்கினன் இல்லை: தன் குல வழக்கத்திற்கு மாருக—மாதவி கோவலன் ஒருவனுடனேயே காதலாக வாழ்ந்தாள்.

மாதவி, பொருளாசை காரணமாகத்தான் கோவலன் மீது காதல் கொண்டிருந்தாளானல்—'நிதி வழிநேயம் நீட்டும்' தன் குல வழக்கமாக—கோவலனின் பொருள் குன்றி வருவதைக் கண்டு பிறிதொருவனை நாடியிருக்கலாம் அல்லவா?

கண்ணகி ஒரு கற்பரசி! அது அவள் குலம் கற்றுத் தந்த பாடம். மாதவி ஒரு கலையரசி! அது அவள் குலம் கற்றுத் தந்த பாடம்!

'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்ற வழி ஒழுகி நடக்கவில்லை மாதவி! கண்ணகியே தான் கொழுநனைத் தெய்வமாக வணங்கி வாழ்ந்தாள்' என்றுரைக்கின்றனர்.

பழந் தமிழ் இலக்கியங் 'காதல்' எனக் காட்டிய அன்பின் ஐந்திணை வழி ஒழுகி நடந்தாள மாதவி. காதலனுடன் உரிமை அன்புபூண்டு வாழ்ந்தாள் மாதவி! 'ஊடலும் கூடலும் காதலன் உவப்ப' அளித்து வாழ்ந்தாள் மாதவி. அது அன்பின் வழியேயன்றி அகங்காரத்தின் வழியல்ல! கோவலனுடைய உரிமைமிக்க மனைவியாக வாழ்ந்தாள் அவள்.

'கண்ணகி கற்பரசியாதலால் அவளால் இறந்த கணவனின் உயிரைக் காணவும்- அரசனுடன் வாதிக்கும் வீரமும் பெற்ருள்' என்று குறிப்பிட்டார்கள்.

மாதவி பரம்பரையாக அரசனுக்கும் ஆண்டு வந்த பரம்பரைக்கும்- பொருள் படைத்தோர்க்கும் விலைமாதராய் பொது மகளிராய் விளங்கி வந்த தன் சமூகச் சூழலையே எதிர்த்து நின்ருள். தன் குல வழக்கத்திற்கு மாருக கோவலனுடைய காதலியாக ஒரு நெறிப்பட்டு வாழ்ந்தாள். பிறப்பின் காரணத்தால் அமைந்த கணிகையர் வாழ்விற்குக் கட்டுப்படாமல் கற்புடைய மங்கையாக நல்வாழ்வு வந்தார்.

தான் மட்டும் தன் குலத்தை ஒழித்து-தான் மட்டும் தன் கலையைத் துறந்து துறவியாகாமல்- தான் பெற்ற மகளையும் துறவியாக்கினுள். தான்பிறப்பால் கணிகையாதலால் தன் மகளையும் கணிகை என்றே அழைப்பர் என அஞ்சி- அவளை 'மாபெரும் பத்தினி மகள்' என்ருள். 'மணிமேகலையை வான்துயர் உறுக்கும்- கணிகையர் குலம் காணுது ஒழிக எனக் கோதைத் தாமம் குழலொடு களைந்து போதித் தானம் புரிந்து அறம் கொள்ளப் படுத்தினள்.'

'ஆய்கது கேட்ட அரசனும் நகரமும் ஓங்கிய நன் மணி உறுகடல் வீழ்த்தோர் தம்மின் துன்பம் தாம் நனி எய்தவும்' அதனை எதிர்த்துப் போராடி வென்ருர்.

இவ்வாருக- பரம்பரை பரம்பரையாக விலை மாதராய் - பொதுமகளிராய் - வரைவின் மகளிராய் ஒருநெ



செல்வி சற்குணதேவி நடராசா.

றியற்ற வாழ்க்கை வாழ்ந்த குலத்தில் தோன்றி- சேற்றிலே முளைத்த செய்ய தாமரையாக, ஆடல்பாடலொடு அழகுதலையும் கற்று- அதுவே தாளுகி- தானே அதுவாக வாழ்ந்து- அக்கலைக்கு தான் அடிமையாகாது- தான் மணந்த கோவலனையே காதலித்து- அவனுக்கேற்ற நன் மனைவியாய் அன்பாலும் பண்பாலும் உயர்ந்து சிறந்து விளங்கி- ஈற்றில் தன் கலையை- தன் சூழலை- தான் தன் கணவன் மேற் கொண்ட அன்பையும் துறந்து- தன்னைத் துறந்து- தன் மகளைத் துறந்து மாபெரும் அறச்செல்வியாகத் துறவியாக மாறிய மாதவியே- குல் இயல்பின் வழி கற்பரசியாகிய கண்ணகியை விடச் சிறந்தவள் என்பதில் ஐயமேயில்லை!

## இலங்கை வரவிருக்கும் ஒப்பனைத் திலகம்

### நாஞ்சில் சிவராமன்

தென்னகத் தமிழ்த் திரையுலகின் ஒப்பனைக் கலைஞர்களில் மிகவும் சிறந்து விளங்குபவரான ஒப்பனைக் கலைமணி நாஞ்சில் என். பி. சிவராமன் அவர்களை சுதந்திரன் ரசிகர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் நாஞ்சில் நாட்டிலுள்ள காஞ்சாவபுரம் என்னும் ஊரில் 1922ம் ஆண்டு தைத் திங்களில் திரு. பத்மநாப வைத்தியருக்கும் திருமதி சங்கரம்மாளுக்கும் எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

உழைத்துப் பிழைக்கவேண்டுமென்ற உறுதிப்பாட்டினுல் நெசவுத் தொழிலில் பயிற்சி பெற்ருர். ஆனல் கலை உலகம் அவரைக் கூவி அழைத்து நடிப்புத்துறையில் ஈடுபட ஆர்வத் தீயை மூட்டியது.

இதனல், அமச்சூர் நாடக மன்றங்களின் நாடகங்களான 'கோவலன்' 'சத்தியவான் சாவித்திரி' போன்ற நாடகங்களில் மிகவும் பிரமாதமாக நடித்து தானும் ஒரு நல்ல நடிகன் என [illegible] நிலைநாட்டினுர். இதன்பிறகு நாடகத் துறையில்



வாழ்க்கையை ஈடுபடுத்த விரும்பி டி. எஸ். பாலையாவின் நாடகக் குழுவிலும் பின்பு டி. கே. எஸ். நாடகக் குழுவிலும் சேர்ந்து நடிக்கத் தொடங்கினுர்.

டி. கே. எஸ். நாடகக் குழுவிலிருக்கும் பொழுது நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதுவதுடன், 'சாவிற்குப் பின்' 'வாழ்க்கைப் போர்' ஆகிய நாடகங்களை [illegible] [illegible] ஒப்பனைக் கலையி லும் தனது சிந்தனையைச் செலுத்தி அதிலும் அனுபவம் பெற்றிருப்பதைக்கண்ட திரு. டி. கே. சண்முகம், தனக்கு ஒளவையாராக ஒப்பனை செய்யுமாறு சொன்னுர். அவரது ஒப்பனை மிகவும் தத்ரூபமாகவே இருந்ததினுல் தனது பாராட்டுதலைத் தெரிவித்ததுடன் சில ஆலோசனைகளையும் கூறி ஊக்கப்படுத்தினுர்.

சில ஆண்டுகள் ஜெமினி ஸ்டுடியோவில் ஒப்பனையாளராகக் கடமையாற்றிய குமாரி வைஜயந்தி மாலாவுக்குச் செய்திருந்த ஒப்பனை ஓவிய மன்னன் திரு மணியந்தினுல் 'கல்கி'யில்திட்டப்பட்ட சித்திரத்திற்குஒப்பாக இருந்ததென எல்லோராலும் பாராட்டப்பட்டவர் ஒப்பனைக்கலைமணி சிவராமன் அவர்கள்.

இப்படத்தின் மூலம், குமாரிவையஜந்திமாலாவின் குழுவில் ஒப்பனையாளராகச் சேர்ந்து ருஷ்யா பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடு

பின்பு அங்கிருந்து விலகி வீனாஷ் பிக்சர்ஸ் நிறுவனத்தில் சேர்ந்து யார் பையன்? படத்தின் ஒப்பனைப் பொறுப்பை ஏற்றுத்திறம்படச் செய்ததினுல் அவரது ஆற்றலும் நுட்பமும் பிரகாசிக்கத் தொடங்கியது.

பேராசிரியர் 'கல்கி' அவர்களால் எழுதப்பட்டுப் பல லட்சம் வாசகர்களின் உள்ளங்களைக்கவர்ந்த சரித்திர நவின மாகிய 'பார்த்திபன் கனவு' என்னும் கதையை, ஜுபிலி பிலிம்சார் படமாகத் தயாரித்தார்கள். இதில்

களுக்கு என்று, தமிழ் நாட்டின கலைச்சிறப்பை அந்த நாட்டு மக்கள் வியந்து பாராட்டும் வண்ணம் எடுத்துக்காட்டினுர்.

இலங்கை கலாசார அபிவிருத்திக் கழகத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டு 1970ம் ஆண்டு தைத்திங்களில் இங்கு வருவதற்கு இணங்கியுள்ளார்.

— ஆ. இராசரத்தினம்,
செயலாளர்,
இலங்கை கலாசார அபிவிருத்திக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை



உள்ளம்



சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்
மார்கழி 11ம் திகதி முதல் செல்லமகால்
மற்றும் திரைகளில்
ஜெமினி கணேசன் நடித்த

# குழந்தை உள்ளம்

மற்றும்
ரங்கராவ்
பேபிகள்:
ரோஜாரமணி - ஷகீலா



இவ்வுலகில் மனிதருக்கு குழந்தை உள்ளம் இருந்துவிட்டால்............ துன்பமே பறந்துவிடும்!

டைரக்‌ஷன்:
சாவித்திரி கணேஷ்

---



இப்பொழுது காட்சியளிக்கிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், பத்மினி, சாவித்திரி, கே. ஆர். விஜயா, நாகேஷ், மனோரமா, முத்துராமன் நடிக்கும்

# திருவருட் செல்வர்


(ஈஸ்மன் கலர்)

மூன்றுவது வெற்றி வாரம்
ஈரோஸ் (பாமன்கடை) மைலன் (கொழும்பு) பணக்காரப் பிள்ளை

கெப்பிட்டல் (கொழும்பு)
தாய் சொல்லைத் தட்டாதே

---

2வது ஜனத்திரள் நிறைந்த மாதமாக காட்சியளிக்கிறது!!



சென்ட்ரல் (மருதானை) ● ராணி (யாழ்நகர்) ● ஜோதி (திருமலை)
ஆகிய திரைகளில்

★காதல் மன்னன் ஜெமினி கணேஷன், ★ எஸ். வி. ரங்கராவ், ★ எஸ். வி. சுப்பையா, ★ பத்மஸ்ரீ சரோஜாதேவி, ★ நாகேஷ், ★ எஸ். எஸ். ராஜேந்திரன், ★ ராஜசுலோசனா, ★ குமாரி சச்சு, 'டோமி' (நாய்) மற்றும் பலர் நடித்த

அமர்ஜோதி மூவிஸின்

# குல விளக்கு

கதை-வசனம்-டைரக்‌ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.
இசை: கே. வி. மகாதேவன்.

---

வெகு விரைவில்

'மக்கள் திலகம்' எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, மனோகர், அசோகன், ஜோதி லட்சுமி, ராஜஸ்ரீ, சோ, சந்திரபாபு, நடித்த, —புரட்சி நடிகரின்—

# அடிமைப் பெண் (கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969 வருடம் டிசம்பர் மாதம் 8-ந் திகதிதிங்கட் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 23411